பக்கங்கள்:-22

காலை முரசு

## சகோதரர்களான இரு சிறுவர்கள் விபத்தில் மரணம்

### தாய் படுகாயம்

குருநாகலில் இடம்பெற்ற வீதி விபத்தில் சகோதரர்களான இரண்டு சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர். 06

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | சித்திரை 16 | திங்கட்கிழமை | 28.04.2025 | அதிர்வு 267



# தையிட்டி விகாரை சுற்றாடல் காணிகளை விடுவிக்க முடிவு?

## தேர்தலுக்கு முன்னர் நடக்கலாம்

யாழ்.வலிகாமம்வடக்கு,தையிட்டியில்ஆக்கிரமிக்கப்பட்ட பொதுமக்களின் நிலத்தில் கட்டப்பட்டிருக்கும் விகாரையைச் சூழ இருக்கின்ற காணிகள் பலவற்றை விடுவிப்பதற்கு அரச உயர் மட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

எதிர்வரும் 6 ஆம் திகதி உள்ளூராட்சி சபைத் தேர்தல் வாக்களிப்புக்கு முன்னர் பெரும்பாலும் அடுத்து வரும் சில தினங்களில் இந்தக் காணி விடுவிப்பு இடம்பெறும் சாத்தியங்கள் இருக்கின்றன எனத் தெரிகின்றது. 06

# முதுகெலும்பே இல்லாத தேர்தல் ஆணையம் இது!

## சுன்னாகம் கூட்டத்தில் சுமந்திரன் சாட்டை

(ந.லோகதயாளன், பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

"தேர்தல் அறிவிக்கப்பட்ட உடனேயே காவல் படை, பொலிஸ் முழுவதும் தேர்தல் ஆணைக் குழுவின் கட்டுப்பாட்டின் கீழ் வர வேண்டும் என அரசமைப்புச் சொல்கின்றது. ஆனால், இங்கே தேர்தல் செயலக 06







கொழும்புக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா கடந்த வாரம் முன்னாள் ஜனாதிபதிகள் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரைத் தேடிச்சென்று தனித்தனியாகச் சந்தித்துப் பேசி இருக்கின்றார்.

அந்தச் சந்திப்பின் பின்னணி குறித்து இப்போது தகவல்கள் கசிந்துள்ளன.

இம்மாத முற்பகுதியில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கொழும்பு வந்த சமயம் தம்முடைய பழைய நண்பர்களான ஜனாதிபதிகள் மஹிந்த ராஜபக்ஷவையும் ரணில் விக்கிரமசிங்கவையும் அவர் சந்திக்கவில்லை. சந்திப்புக்கான முன் முயற்சிகளும் இந்தியத் தரப்பினால் அப்போது எடுக்கப்படவில்லை. அது பற்றி அரசல் புரசலாக அதிருப்தித் தகவல்கள் வெளிவந்திருந்தன.

இரண்டு முன்னாள் ஜனாதிபதிகளையும் இந்தியத் தரப்பின் சார்பில் நேரடியாகச் சந்தித்து, தாஜா பண்ணி, சமாளிக்கும் ஒரு நகர்வுதான் கடந்த வாரத்தில் இடம்பெற்றது என்று 06




# தபால்மூல வாக்களிப்பு நாளையுடன் நிறைவு

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு நாளை செவ்வாய்க்கிழமை உடன் நிறைவடைகிறது. வாக்களிப்புக்கான காலம் இனி நீட்டிக்கப்படாது. ஆகவே வாக்களிப்பதற்கு தகுதி பெற்றுள்ள சகல அரச உத்தியோகத்தர்களும் தவறாமல் வாக்களிக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் அதிகார சபைகளுக்கான உத்தியோகபூர்வ வாக்கெடுப்பு எதிர்வரும் மாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளது. உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் தபால் மூல வாக்களிப்புக்கு இம்முறை 647,495 அரச உத்தியோகத்தர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

இதற்கமைய கடந்த 24, 25ஆம் திகதிகளில் தபால்மூல வாக்கெடுப்பு நடைபெற்றது. இன்றும், நாளையும் வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது. தபால்மூல வாக்கெடுப்பு வழங்கப்பட்ட காலவகாசம் நாளையுடன் நிறைவடையவுள்ளதால் இனி வாக்களிப்புக்கு அவகாசம் வழங்கப்படமாட்டாது.

ஆகவே தபால்மூல வாக்களிப்புக்கு தகுதி பெற்ற சகல அரச உத்தியோகத்தர்களும் தவறாமல் வாக்களிக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

# உள்ளூராட்சி தேர்தல் தொடர்பில் 3,053 முறைப்பாடுகள் பதிவு




உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் கடந்த மாதம் 20 ஆம் திகதியிலிருந்து நேற்று முன்தினம் வரை 3,053 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இவற்றில் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 18 முறைப்பாடுகளும், சட்டத்தினை மீறியமை தொடர்பில் 2,831 முறைப்பாடுகளும் வேறு சம்பவங்கள் தொடர்பில் 189 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன

அத்துடன், கடந்த 24 மணித்தியாலங்களில் மாத்திரம் 210 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவற்றில் 03 வன்முறைச் சம்பவங்களும், சட்டத்தினை மீறியமை தொடர்பில் 199 முறைப்பாடுகளும் வேறு சம்பவங்கள் தொடர்பில் 08 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதுவரை கிடைக்கப்பெற்ற 3,053 முறைப்பாடுகளில் 2,491 முறைப்பாடுகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன எனவும் 562 முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.







# இலங்கை தமிழ் அரசு கட்சியின் பரப்புரைக் கூட்டம் வடமராட்சி

யாழ். வடமராட்சி – மாலை சந்தை மைக்கல் விளையாட்டுக் கழக மைதானமத்தில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பரப்புரைக் கூட்டம் நேற்று இடம்பெற்றது.

மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எஸ்.சுகிரதன் தலைமையில் இந்த கூட்டம் இடம்பெற்றது.

இப் பரப்புரைக் கூட்டத்தில் தமிழ் அரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம், நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு உரை யாற்றினார்கள்.

இப் பரப்புரைக் கூட்டத்தில் நூற்றுக் கணக்கான கட்சியின் ஆதரவாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.
















# சட்டத்தின் ஆட்சி பறிபோய்விட்டது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கூறுகிறார்

தேர்தல் நெருங்கும் நேரத்தில் கிராமத்தின், நகரத்தின் அதிகாரம் குறித்து மக்கள் தெளிவான முடிவை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஹோமாகமயில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களின் போது நாட்டிற்கு வழங்கிய தேர்தல் விஞ்ஞாபனங்கள் மற்றும் வாக்குறுதிகளுக்கு என்ன நடந்தது என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

தற்போது, சமூகம் கொலைகாரர்களின் பிடியில் சிக்கியுள்ளது. எந்தநேரத்தில் எங்கு என்ன நடக்கும் என தெரியாதுள்ளது.

சட்டத்தின் ஆட்சி பறிபோய்விட்டது. அரசாங்கத்திடம் சட்டம் ஒழுங்கை பேணுவதற்கான தேசிய திட்டமொன்று இல்லை.

பிரஜைகளின் வாழ்வுரிமையை உறுதிப்படுத்துவதும், சட்டத்தை அமுல்படுத்துவதும், மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதும் அரச தலைவரின் பொறுப்பாகும்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எழுதிய கடிதத்தால், அமெரிக்கா விதித்த தீர்வை வரி 90 நாட்களுக்கு நிறுத்தப்பட்டதாக பிரதி அமைச்சர் ஒருவர் தெரிவித்திருந்தார்.

பின்னர் வேறொரு தூதுக் குழு, அமெரிக்கா பயணமாகி, கலந்துரையாடல்கள் எமக்கு சாதகமாக இறுதி செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவித்தனர்.

இந்த வரியைத் திருத்துவது தொடர்பான பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதால், இந்த விடயம் தொடர்பாக இரு தரப்பினரும் கூட்டு அறிக்கையை வெளியிட திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

இருந்த போதிலும், அவ்வாறான அறிக்கை எதுவும் இன்றுவரை வெளியிடப்படவில்லை." என்றார்.






# கண்டியில் மூடப்பட்டிருந்த பாடசாலைகள் இன்று திறப்பு

புனித தந்ததாது கண்காட்சியை முன்னிட்டு, ஏற்படக்கூடிய நெரிசலைத் தவிர்ப்பதற்குக் கண்டி நகரம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் மூடப்பட்டிருந்த 24 பாடசாலைகளும் இன்று திறக்கப்படவுள்ளன.

அத்துடன், பாதுகாப்பு பிரிவினரின் தங்குமிடமாகப் பயன்படுத்தப்பட்ட 37 பாடசாலைகள் நாளை மீளத் திறக்கப்படவுள்ளன என மத்திய மாகாண ஆளுநர் தெரிவித்தார்.

இதுவரையான காலப்பகுதியில் மேற்படி கண்காட்சியினைப் பார்வையிடுவதற்குப் பிரவேசிப்பவர்களின் சுகாதார பாதுகாப்பை உறுதி செய்வதற்காகச் சுகாதார மேம்பாட்டு பணியகம் மற்றும்பொலிஸார்தொடர்ச்சியாகஆலோசனைகளை வழங்கியிருந்தனர்.

# அநுராதபுரத்தில் ஏரியில் குளித்த ஐவர் மின்னல் தாக்கியதில் காயம்

அநுராதபுரம் பசவக்குளம் ஏரியில் நேற்று மதியம் குளித்தபோது மின்னல் தாக்கியதில் தந்தை, மகன் உட்பட ஐந்து பேர் காயமடைந்து அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என அநுராதபுரம் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அனுமதிக்கப்பட்டவர்களில் இருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

யாத்திரைக்காக அநுராதபுரத்திற்கு வந்திருந்த குழுவினரே இந்த அனர்த்தத்தை எதிர்கொண்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த 24, 30, 38 மற்றும் 48 வயதுடைய நபர்கள் பயாகல, வல்பொல மற்றும் இரத்தினபுரி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

மின்னல் தாக்கியபோது ஒருவர் டெக்கில் தொலைபேசி அழைப்பில் இருந்தார் எனக் கூறப்படுகின்றது.

குளிக்கும் பகுதிக்கு அருகில் இருந்த ஒரு பெரிய மரக் கிளை மின்னல் முறிந்து விழுந்துள்ளது. மரம் வேர் வரையில் சேதமடைந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வரும் 48 மற்றும் 24 வயதுடைய இருவரும் தந்தை மற்றும் மகன் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.






## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

\+ + +

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற சமயத்தில் அடுத்தடுத்து இரண்டு தலைவர்களின் மறைவை ஒட்டிய இறுதி நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்காக வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டார். ஒன்று - லண்டனில் பிரிட்டிஷ் மகாராணியாரின் இறுதி நிகழ்வு. மற்றையது - ஜப்பானில் அந்நாட்டுப் பிரதமர் ஷின்ஷே அபேயின் இறுதி நிகழ்வு.

அந்த இருவெளிநாட்டுப்பயணங்களையும் அச்சமயத்தில் எதிர்க்கட்சியில் இருந்த அநுர குமார திஸநாயக்காவும் அவரது தேசிய மக்கள் சக்தியினரும் கடுமையாக விமர்சித்தனர். பொது மக்களின் பணத்தை இப்படி இறுதிக் கிரியை நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்குப் பயணம் செய்து செலவழிப்பதா என்று அவர்கள் கேள்வி எழுப்பினர்.

இப்போது மறைந்த பாப்பரசரின் இறுதி நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்காக வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத் வத்திக்கான் பறந்துள்ளார்.

இப்போது மட்டும் வெளிநாட்டுத் தலைவர் ஒருவரின் இறுதி நிகழ்வில் பங்குபற்றுவதற்காக மக்கள் வரிப்பணத்தில் வெளிவகார அமைச்சர் வெளிநாட்டு பயணத்தை மேற்கொண்டமை சரியானதா என்று மக்கள் கேட்கிறார்கள். யாரிடம் போய் இந்தக் கேள்விக்கு பதில் தேடுவது என்பதுதான் தெரியவில்லை.

\+ + +

அமைச்சர் பிமல் ரத்நாயக்காவின் கீழிருக்கும் போக்குவரத்து அமைச்சு அதிகாரிகளின் ராஜினாமாப் பட்டியல் தொடர்ந்து நீள்கின்றது.

ஏற்கனவே போக்குவரத்துச் சபையின் தலைவர் ரமால் சிறிவர்த்தன, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி பந்துல திலீப் விதாரண, தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத் தலைவர் கலாநிதி ருவான் விஜயமுனி ஆகியோர் ராஜினாமாச் செய்திருந்தார்கள்.

இப்போது மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷந்த அனுருத்த வீரசிங்க கடந்த வாரத்தில் ராஜினாமாச் செய்திருக்கிறார். அவரது இடத்துக்கு இலங்கை நிர்வாக சேவையில் விசேட தர சேவையில் இருக்கும் - ஆளும் தரப்புடன் நெருங்கிய தொடர்பு கொண்ட கமால் அமரசிங்க அந்த இடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்த ராஜினாமா அங்கங்கள் தொடர்வதற்கு காரணம் அதிகாரிகளின் தவறா அல்லது போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள், சிவில் விமான சேவை அமைச்சர் பிமல் ரத்நாயக்காவின் பிழையா என்று தெரியவில்லை. கடவுளுக்குத்தான் வெளிச்சம்.

## சகோதரர்களான..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மோட்டார் சைக்கிள் ஒன்று பஸ் ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

10 மற்றும் 16 வயதுடைய இரண்டு சிறுவர்கள் தங்கள் தாயுடன் நேற்று மோட்டார் சைக்கிளில் பயணித்து கொண்டிருந்த வேளையிலே இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த தாய் குருநாகல் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்த விபத்துடன் தொடர்புடைய பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

## தையிட்டி விகாரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இப்போது தையிட்டி விகாரை கட்டப்பட்டுள்ள காணிகளைத் தவிர்த்து சுற்றாடலில் இன்னமும் பொதுமக்கள் செல்வதற்கு அனுமதிக்கப்படாத காணிகளை அடையாளம் கண்டு விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை அரசு ஏற்கனவே எடுத்திருப்பதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை, கிளிநொச்சியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அரசுத் தரப்பினரின் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, போரின்போது பாதுகாப்புப் படையினரால் கையகப்படுத்தப்பட்ட பொது மக்களுக்குச் சொந்தமான அனைத்துக் காணிகளையும் மீண்டும் விடுவித்து மக்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தையிட்டி விகாரையைச் சுற்றியுள்ள ஏனைய காணிகளை விடுவிப்பதன் மூலம் தையிட்டி விகாரை விவகாரத்தில் அரசுக்கு எதிராகக் கிளம்பியுள்ள எதிர்ப்பு அலைகளை சற்று தணிக்கச் செய்யலாம் என்றும், தேர்தலில் வடக்கு மக்களின் நம்பிக்கையைப் பெறலாம் என்றும் அரசு தரப்புக் கருதுவதாகத் தெரிகின்றது.

## முதுகெலும்பே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதிகாரிகளைக் காவல் படையினர் தடுக்கின்றனர்." - என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

சுன்னாகம் பகுதியில் நேற்று வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து இடம்பெற்ற தேர்தல் கூட்டத்தில் பங்குகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் வேட்பாளர் தியாகராஜா பிரகாஷ் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் மேலும் உரையாற்றுகையில்,

"தேர்தல் கூட்டங்களில் தேர்தல் இலஞ்சம், முறையற்ற அழுத்தம் என்பன தொடர்மில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. ஆனால், ஆணைக்குழு எதுவும் செய்கின்றதாக இல்லை.

பிரதமர் ஹரிணி அமரசூரிய இங்கே வந்தபோது கோயில் வளாகத்திலே தேர்தல் பரப்புரைக் கூட்டம் இடம்பெறுகின்றது எனச் சொல்லி தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்த போது (இதனை ஆணைக்குழுவுக்குச் சொல்கின்றேன்) தேர்தல்கள் ஆணைக் குழுவின் உத்தியோகத்தர்கள் அங்கே போனார்கள். போனவர்களைப் பிரதமரின் காவலாளிகள் உள்ளே போக விடவில்லை.

இதனால் திரும்பி வந்து விட்டீர்கள். நீங்கள் என்ன ஆணைக்குழு? உங்களையா நாங்கள் தேர்தல்கள் ஆணைக் குழுவென்று அரசமைப்பையும் திருத்தி, உங்களுக்கு இத்தனை அதிகாரங்களையும் கொடுத்து வைத்திருக்கின்றோம்?

ஆணைக்குழுவுக்கு முதுகெலும்பு இருந்தால் உடனடியாக இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கான அதிகாரம் இருக்கின்றது. தேர்தல் அறிவிக்கப்பட்டவுடனே காவல் படை, பொலிஸ் முழுவதும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டின் கீழ் வர வேண்டும் எனச் சட்டம் சொல்கின்றது - அரசமைப்புச் சொல்கின்றது. ஆனால், அந்த அதிகாரத்தையும் பாவிக்காமல் சுயாதீன ஆணைக்குழு என்று ஒரு பெயரையும் சூட்டி வைத்துக்கொண்டு எந்தவித சுயாதீனமும் கிடையாது. இங்கே மிக முறையற்ற விதத்திலே பரப்புரைகள் எல்லாம் நடக்கின்றன. அதைத் தட்டிக் கேட்க அவர்களுக்கு முதுகெலும்பு இல்லை.

அரசு இத்தனை காலமும் எல்லாம் சொல்லிக்கொண்டு இருந்தார்கள். ஊழலுக்கு எதிரானவர்கள் என்றனர். ஆனால், தற்போது அப்பட்டமாகவே தெரிகின்றது. நாம் நினைத்தோம் ஒரு இரண்டு வருடம் தேவையாக இருக்கும், கோட்டபாய அரசைப்போன்று இரண்டு ஆண்டுகள் தேவை என்று. ஆனால், இவர்களுக்கு இரண்டு வருடங்கள் கூடத் தேவையில்லை. ஆறு மாதங்களிலேயே சிவப்புச் சாயம் வெளுத்து விட்டது.

சர்வதேச நாணய நிதியத்தின் பக்கம் செல்லக்கூடாது என்ற அடிப்படைப் பொருளாதாரக் கொள்கையைக் கொண்ட இந்தத் தேசிய மக்கள் சக்தி அரசு, தற்போது ரணில் விக்கிரமசிங்க சர்வதேச நாணய நிதியத்துடன் செய்த ஒப்பந்தத்தில் எந்தவித மாற்றமும் இல்லாமல் தொடர்கின்றது. கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் இந்த ஒப்பந்தத்தில் இருந்த பல குறைபாடுகளைச் சுட்டிக்காட்டினோம். தேசிய மக்கள் சக்தியினரும் கண்டித்திருந்தனர்.

ரணில் அரசு உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புக்காக ஊழியர் சேபலாப நிதியைக் கையாண்டமை தொடர்பில் இன்று அரசில் பிரதி அமைச்சராக இருக்கின்ற ஒருவர் அன்று நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தார். நான் அவருக்குச் சட்டத்தரணியாக ஆஜராகியிருந்தேன். அவர்கள் ஆட்சிக்கு வந்தபின் இப்போது எதையும் மாற்றவில்லை. ரணில் விக்கிரமசிங்க செய்த ஒப்பந்தத்தையே தொடர்கின்றனர்.

அதனால்தான் ரணில் விக்கிரமசிங்கவே இது எல்-போர்ட் அரசு என்கிறார். எங்களுடைய கட்சி சார்பில் உள்ளூராட்சி சபையைக் கைப்பற்றப் போகின்றவர்கள் எல்-போர்ட் அரசியல்வாதிகள் அல்லர். எங்களிடம் அனுபவம் வாய்ந்த தவிசாளர்கள் இருக்கின்றார்கள்.

எல்-போர்ட் அரசியல்வாதிகள் என்றால் யார் என்பதை தேசிய மக்கள் சக்தி சார்பாக யாழ். மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களை அவதானித்தால் புரியும். அதில் வைத்தியர் ஒருவர் இருக்கின்றார். அவர் வாயைக்கூட திறப்பதில்லை. மற்றைய இரண்டு எம்.பிக்களும் இனிமேல்தான் பேசுவதற்குப் பழக வேண்டும். சபையில் மக்களுடன் எவ்வாறு பேச வேண்டும் என்பதை அறியாதவர்கள். அமைச்சர் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் "சும்மா இருடா" என்கிறார். அவர்கள் சொல்வது எங்களுக்கும் புரியவில்லை. அவர்களுக்கும் புரியவில்லை.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஓர் அசம்பாவிதம் இடம்பெற்றுள்ளது. அது யாழ்ப்பாணம் மக்களுக்குத். தற்போது தெளிவாகத் தெரிகின்றது. கல்விக்குப் பெயர் போன யாழ்ப்பாணத்திலிருந்து இவ்வாறான பிரதிநிதிகள் நாடாளுமன்றம் சென்றிருக்கின்றார்கள். எனினும், அதனைத் திருத்தியமைப்பதற்கான சந்தர்ப்பம் உடனடியாகவே உள்ளூராட்சி சபைத் தேர்தலிலேயே

07





# கிளீன் ஸ்ரீலங்கா வழிநடத்தலில் கண்டி நகரம் மக்கள் பங்களிப்பில் தூய்மைப்படுத்தப்பட்டது

சிறி தலதா வழிபாட்டு நிகழ்விற்கு இணையாக, கிளீன் ஸ்ரீலங்கா வழிநடத்தலுடன் கண்டி நகரத்தை சுத்தப்படுத்தும் நிகழ்வு தரிசிக்க வந்தவர்கள், அப்பகுதி நிறுவனத்தினரின் சிரமப் பங்களிப்புடன் நேற்று ஞாயிற்றுக்கிழமை வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது.

இதற்கு கிளீன் ஸ்ரீலங்கா செயலக அதிகாரிகளும், இளைஞர்கள் மற்றும் சிரேஷ்ட பிரஜைகளைக் கொண்ட பல தன்னார்வக் குழுக்களும் தமது பங்களிப்பை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

இன்று திங்கள் ழமை முழு கண்டி நகரம் முழுவதிலும் முன்னெடுக்கப் படவிருக்கும் தூய்மைப்படுத்தல் பணிக்கு கிளீன் ஸ்ரீலங்கா குழுவினர் தயாராக உள்ளனர்.

கழிவுகளை முறையாக அகற்றுவதற்கான மனப்பான்மையை மக்களிடையே ஏற்படுத்துவதன் முக்கியத்துவத்தை விளக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தத் திட்டத்திற்கு, வெற்றிகரமாக்க பொதுமக்களின் ஆதரவு குறைவின்றிக் கிடைத்தது.

தலதா வழிபாட்டுடன் இணைந்ததாக, வரலாற்று சிறப்புமிக்க ஸ்ரீதலதா மாளிகையை மையமாகக் கொண்டு, கடந்த சில நாள்களாக “கிளீன் ஸ்ரீலங்கா” வேலைத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.






## முதுகெலும்பே...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கிடைத்திருக்கின்றது.

ஜனாதிபதி ஊழலை ஒழிப்போம் என்று கூறிவிட்டு, வேறு கட்சிகள் ஆட்சியமைத்தால் பத்து தடவைகள் சிந்தித்தே நிதி வழங்குவோம் என்கிறார். ஊழல்வாதிகளுக்குப் பணம் கொடுக்க மாட்டோம் என்கின்றனர். இங்கு யார் ஊழல் செய்தது? தமிழரசுக் கட்சியின் ஆளுகையின் கீழ் இருந்த எந்தச் சபையிலாவது ஊழல் இடம்பெற்றதா?

தேசிய மக்கள் சக்தி நியமித்த சபாநாயகர் போல் எங்கள் கட்சி ஊழல் செய்யவில்லை. இன்று வரை சபாநாயகரின் கல்வித்தமை வெளிப்படுத்தப்படவில்லை. பொய்யான கல்வித் தகமையைக் காட்டி சபாநாயகரானார். பின் அவருடைய கல்வித் தகைமை சவாலுக்கு உட்படுத்தப்பட்டவுடன் பதவி விலகுவதாகச் சொன்னார். ஆறு மாதங்களாகிவிட்டன. இன்னமும் பட்டச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படவில்லை. ஜனாதிபதியிடம் நேரடியாகவே கேட்கின்றேன் இங்கு யார் ஊழல்வாதி? உங்களுடைய கட்சியிலிருந்து நீங்கள் தெரிவு செய்த சபாநாயகர் ஊழல்வாதியா? இல்லையா? அவரை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து நீக்குங்கள்.

நீதிமன்றில் இருந்து களவு வழக்கிலிருந்து பிணையில் விடுவிக்கப்பட்டவர்கள் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களாக இருக்கின்றார்கள். இவற்றை எல்லாம் வைத்துக்கொண்டு எங்களுக்கு அநுர பிரசங்கம் செய்கின்றார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 25 சதவீதமான வாக்குகளைப் பெற்ற தேசிய மக்கள் சக்தியினர் 3 ஆசனங்களைப் பெற்றிருந்தார்கள். அந்த அசம்பாவிதம் இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் நிகழக்கூடாது என்பதற்காக ஏனைய தமிழ்க் கட்சிகளை விமர்சிப்பதில்லை என்று தீர்மானம் ஒன்றை எடுத்துள்ளோம்.

நாங்கள்தான் பெரிய தமிழ்க் கட்சி. நாடாளுமன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சியாக இருந்தாலும் இந்த உதிரி தமிழ்க் கட்சிகளை நாங்கள் விமர்சிக்கப்போவதில்லை. ஆனால், அந்தக் கட்சிகள் என்னையே தாக்குகின்றன. இதைவிடுத்து எங்கள் இனத்துக்கு ஆபத்தாக மாறியிருக்கின்ற அரச கட்சியை விமர்சியுங்கள்.

இன்று ஆட்சியில் அமர்ந்திருக்கும் தேசிய மக்கள் சக்தியானது 2020ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இருந்து, தற்போது 159 ஆசனங்களுடன் விஸ்வரூபம் எடுத்திருக்கின்றார்கள். பழைய ஊழல் அரசியல்வாதிகளை விரட்ட வேண்டும் என்ற மக்கள் மனதில் இருந்த ஆதங்கத்தின் பலனை இவர்கள் அடைந்திருக்கின்றார்கள். கோட்டாபய துரத்தியடிக்கப்பட்டது போல் இவர்களும் மிக விரைவில் துரத்தியடிக்கப்படுவார்கள்.

நாடு யாருடனும் இருக்கட்டும். நம் ஊர் நம் வீட்டோடு இருக்கட்டும். அதை விட்டுக்கொடுக்க முடியாது. 75 வருடங்களாக சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வைக் கோரிய தமிழினம் உள்ளூர் அதிகார சபை அதிகாரத்தை மத்திய அரசிடம் கொடுப்பது சரியா? அதன் பின் எங்களுடைய சமஷ்டிக் கோரிக்கை என்னவாகும்? இந்த அபாயத்தை மக்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டும். மக்கள் தொடர்ந்தும் சமஷ்டியை வலியுறுத்தும் தமிழரசுக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும்.

இறைமையைப் பிரயோகிக்கும் முதல் படியில் தெளிவாக மக்கள் வாக்களிக்க வேண்டும். நாடாளுமன்றத் தேர்தலில் இடம்பெற்ற அசம்பாவிதம் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இடம்பெற்றுவிடக்கூடாது. இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கே மக்கள் வாக்களிக்க வேண்டும்.” – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மாற்று வழி காண்க!

இலங்கையில் 'பிள்ளையார் கல்யாணம் போல' நாளை, நாளை என்று கூறி நடக்காமல் தள்ளிப் போகும் சில விடயங்கள் இருக்கின்றன.

அவற்றில் ஒன்று - கடந்த 47 ஆண்டுகளுக்கு மேலாக 'தற்காலிக ஏற்பாடுகள் சட்டம்' என்ற பெயரில் நிரந்தரமாகத் தொடருகின்ற பயங்கரவாத தடுப்புச் சட்டமாகும்.

அதுபோன்ற இன்னொரு விடயம் - ஐந்தாம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சையாகும்.

நாட்டு மக்களுக்கு முறையற்ற விதத்தில் கொடூரச் சட்டமாக பயங்கரவாத தடுப்புச் சட்டம் எத்துணை மோசமான தொல்லைகளைக் கொடுக்கின்றதோ அதேபோன்று நமது சிறார்களுக்கு இந்த புலமைப் பரிசில் பரீட்சை பெரும் அழுத்த அவலமாகத் தொடர்கின்றது.

இதற்கு முன்னர் கல்வி அமைச்சராக இருந்த சுசில் பிரேமஜயந்த கூட இந்தப் பரீட்சை முறையை இதோ ஒழிப்போம் என்று ஆரவாரம் பண்ணினார். அவர் போல பல அரசியல்வாதிகள், அதிகாரிகள், தலைவர்கள் அவ்வப்போது இது குறித்து பிரதிக்ஞை செய்து ஆரவாரம் பண்ணினாலும் மாற்றம் ஏதும் வரவில்லை. பரீட்சையும், அது அப்பாவிப் பிஞ்சுச் சிறார்கள் மீது கொடுக்கும் அதீத அழுத்தமும் தொடரவே செய்கின்றன.

இந்த வரிசையில் இப்போது இன்னும் ஐந்து வருடங்களில் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை முற்றாக ஒழிக்கப்படும் என்று ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஷாந்த பத்மகுமார தெரிவித்திருக்கிறார்.

வசதி குறைந்த பிள்ளைகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்குவதற்கும், பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள மாணவர்கள் தேசிய பாடசாலைகள் மற்றும் முன்னேற்றம் கண்டுள்ள பாடசாலைகளுக்கு அனுமதியைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்திலும் இந்தப் பரீட்சை முன்னெடுக்கப்படுகின்றது.

ஆனால் இது பல சமயங்களில் பிள்ளைகள் மீதான ஒரு கட்டாயத் திணிப்பாகவும், பெற்றோரதும் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களதும் போலிப் பகட்டுக்கான ஓர் அடையாளமாகவும் மாறி இருப்பதைப் பலரும் அவதானித்து வெளிப்படுத்தி உள்ளனர்.

பத்து வயதுச் சிறார் மீது முறையற்ற அழுத்தத்தை ஏற்படுத்தும் இந்தப் பரீட்சை முறைமை சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு கல்வி மீதே வெறுப்பை ஏற்படுத்தும் மோசமான நெருக்குவாரத்தைத் தருகின்றது என்பது மறுக்கக் கூடியது அல்ல.

ஒரு போட்டிப் பரீட்சையாக - பெற்றோரின் வாழ்நாள் சவாலாக - பத்தே வயதான பிள்ளையை மிக மோசமான அழுத்தத்திற்கு உள்ளாக்கும் நடவடிக்கையாக - இது முன்னெடுக்கப்படுவது தவிர்க்கப்பட வேண்டும்.

சம்பந்தப்பட்ட பிள்ளைகளுக்கு உதவித்தொகை வழங்குவதற்கும், பின்தங்கிய பிரதேச மாணவர்களுக்கு முன்னேற்றம் கண்டுள்ள பாடசாலைகளில் இடம் வழங்குவதற்கும் உரிய தெரிவை மேற்கொள்வதற்கு மாற்று வழிமுறை ஒன்று கண்டுபிடிக்கப்பட வேண்டும். இவ்வாறு ஐந்தாம் ஆண்டு மாணவனின் தலையில் போட்டிப் பரீட்சையை பெரும் நெருக்குவாரமாக அழுத்தும் நமது கல்வி முறைமை மாற்றப்பட வேண்டும்.

இந்த முறைமை மாற்றப்பட வேண்டும் என்பதை நம் கல்விச் சமூகமும் நிர்வாகிகளும் உணர்ந்து ஏற்றுக் கொண்டாலும், மாற்றுவழி திட்டம் ஒன்று நடைமுறைக்கு வருவதாக இல்லை. இந்தக் கேடு கெட்ட அழுத்த முறைமை தொடர்கின்றது.

நமது கல்வி முறைமைக்கு ஆரம்பக் கல்வியிலேயே மோசமான நெருக்கடியைத் தரும் இந்தத் திட்டத்தை மாற்றி அமைக்கும் ஓர் ஏற்பாடு குறித்து அரசும் மக்களும் மக்கள் பிரதிநிதிகளும் காத்திரமான நடவடிக்கைகளை எடுப்பது கட்டாயமாகும்.



# பொன்முடி, செந்தில் பாலாஜி இராஜினாமா; மீண்டும் அமைச்சராகிறார் மனோ தங்கராஜ்

அமைச்சர்கள் பொன்முடி, செந்தில் பாலாஜி ஆகியோர் தங்கள் பதவியை இராஜினாமா செய்துள்ளனர். மனோ தங்கராஜ் இன்று மீண்டும் அமைச்சராகிறார். அமைச்சரவை மாற்றம் குறித்து ஆளுநர் மாளிகை அறிக்கை வெளியிட்டுள்ளது.

ஆளுநர் மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"மின்சாரம், மதுவிலக்கு மற்றும் கலால் துறை அமைச்சர் வி. செந்தில்பாலாஜி மற்றும் வனத்துறை அமைச்சர் கே. பொன்முடி ஆகியோரின் இராஜினாமாவை ஏற்குமாறு முதல்வர், ஆளுநருக்கு பரிந்துரைத்தார். ஆளுநர் இந்தப் பரிந்துரையை அங்கீகரித்துள்ளார்.

அதோடு, அமைச்சர்களின் இலாகா மாற்றம் மற்றும் துறை ஒதுக்கீடுகளுக்கான முதலமைச்சரின் பரிந்துரையை ஆளுநர் அங்கீகரித்துள்ளார். அதன்படி, போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் வசம், மின்சாரத் துறை கூடுதலாக ஒதுக்கப்படுகிறது. எனவே, அவர் போக்குவரத்து மற்றும் மின்சார அமைச்சராக இருப்பார்.

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சர் எஸ்.முத்துசாமிக்கு கூடுதலாக மதுவிலக்கு மற்றும் கலால் துறை ஒதுக்கப்படுகிறது. எனவே, அவர் வீட்டு வசதி, மதுவிலக்கு மற்றும் கலால் துறை அமைச்சராக இருப்பார்.

பால் மற்றும் பால்வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், கூடுதலாக வனங்கள் மற்றும் காதி துறைகளை கவனிப்பார். மேலும், பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதி எம்.எல்.ஏ., டி.மனோ தங்கராஜை அமைச்சரவையில் சேர்க்க முதல்வர் பரிந்துரைத்துள்ளார். இந்தப் பரிந்துரையை ஆளுநர் அங்கீகரித்துள்ளார்.

நியமிக்கப்பட்ட அமைச்சரின் பதவியேற்புவிழா இன்று மாலை 6.00 மணிக்கு சென்னையில் உள்ள ஆளுநர் மாளிகையில் நடைபெறும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பா.ஜ.க - பா.ம.க..இருக்கின்ற அணியில் வி.சி.க. இடம்பெறாது

## திருமாவளவன் திட்டவட்டம்



பா.ஜ.கவும், பா.ம.கவும் இருக்கும் அணியில் வி.சி.க. இடம்பெறாது என்று அதன் தலைவர் தொல் திருமாளவவன் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி திருபுவனையில் புதிதாக அமைக்கப்பட்ட அம்பேத்கரின் முழு உருவ சிலை திறப்பு நிகழ்வு நடந்தது. விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் சிலையை திறந்து வைத்து கட்சியில் பல்வேறு நிலைகளில் பணியாற்றியோருக்கு விருதுகள் மற்றும் பரிசுகளை வழங்கி கௌரவித்தார்.

மேற்படி நிகழ்ச்சியில் பேசிய அவர்,

"தமிழகத்தின் வேங்கை வயல், கள்ளக்குறிச்சி, மேல்பாதி உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்காக தி.மு.க. அரசின் பொலிஸை கண்டித்து பல போராட்டங்களை நடத்தி உள்ளோம். இதற்கெல்லாம் அ.தி.மு.க. போராட்டங்களை நடத்த வேண்டியது தானே?

தி.மு.கவோடு நாம் தொடர்ந்து பயணிக்கிறோம் என்பதையே பலர் கேலி பேசுகிறார்கள். நான் கூட்டணிக்காக எல்லா கதவுகளையும் திறந்து வைத்திருக்கவில்லை. பா.ஜ.க - அ.தி.மு.கவோடும் தேவைப்பட்டால் மற்ற கட்சிகளோடும் கூட்டணிக்காக ஒரே நேரத்தில் 2 அணியிலும் பேசும் இராஜதந்திரம் நமக்குத் தெரியாது.

பா.ஜ.கவும், பா.ம.கவும் இருக்கும் அணியில் ஒருபோதும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி இடம்பெறாது. புதிதாக கட்சி தொடங்கி இருக்கிற நடிகர் விஜய் கூட புத்தக வெளியீட்டு விழாவுக்கு வரும்படி அழைப்பு விடுத்தார். விழாவுக்குச் செல்வதன் மூலம், ஒரு தவறான யூகத்தை கொடுத்து விடக்கூடாது, ஒரு குழப்பத்தை ஏற்படுத்தி விடக்கூடாது, அதன் மூலம் நாம் இருக்கிற அணி பலவீனப்பட்டால் பா.ஜ.கவுக்கு சாதகமாக அரசியல் சூழல் மாறிவிடும் என்பதையெல்லாம் யூகித்து அந்த விழாவையே புறக்கணித்தேன்.

எனக்காக திறந்து வைக்கப்பட்டிருந்த அ.தி.மு.க. கதவை மூடியது போன்று விஜய் திறந்து வைத்திருந்த கதவையும் மூடினேன். ஆட்சியில் பங்கு, துணை முதல்வர் பதவி என ஆசை வார்த்தைகளால் என்னை வீழ்த்தி விட முடியாது. அரசியலில் நான் எடுக்கிற ஒவ்வொரு முடிவும் அம்பேத்கரின் கருத்துக்களை மனதில் வைத்து எடுக்கும் முடிவுகள்தான்."

என்று தெரிவித்தார்.





# இந்தியாவை தாக்க தயார் நிலையில் நூற்றுக்கும் மேற்பட்ட அணு ஆயுதங்கள்

## பாகிஸ்தான் அமைச்சர் ஹனிஃப் அப்பாஸி தெரிவிப்பு

இந்தியாவைதாக்க130அணுஆயுதங்கள் தயாராக உள்ளன என பாகிஸ்தான் அமைச்சர் ஹனிஃப் அப்பாஸி தெரிவித்துள்ளார்.

இந்த கருத்து இரு நாடுகளுக்குமிடையிலான பதற்றத்தை மேலும் அதிகரிக்க செய்துள்ளது.


அத்துடன், தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ள அந்த ஆயுதங்கள் இந்தியாவுக்காக மட்டுமே நாட்டின் பல்வேறு பகுதிகளில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

சிந்து நதிநீர்ப் பங்கீடு ஒப்பந்தத்தை நிறுத்துவது உள்ளிட்ட 5 முக்கிய அதிரடி முடிவுகளை இந்தியா எடுத்த நிலையிலேயே பாகிஸ்தான் அமைச்சர் மேற்கண்டவாறு எச்சரித்துள்ளார்.

“பாகிஸ்தானுக்கு தண்ணீர் வழங்குவதை நிறுத்தினால், அவர்கள் போருக்கு தயாராக இருக்க வேண்டும். எங்களிடம் உள்ள இராணுவ உபகரணங்கள், ஆயுதங்கள், அணு ஆயுதங்கள் மற்றும் ஏவுகணைகள் வெறும் கண்காட்சிக்கானது அல்ல.

நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் 130 அணு ஆயுதங்கள் வைக்கப்பட்டுள்ளன. அவை எங்கு உள்ளன என்று யாருக்கும் தெரியாது. இந்த அணு ஆயுதங்கள் அனைத்தும் இந்தியாவை மட்டுமே குறிவைத்து நிறுத்தப்பட்டுள்ளன” எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# 400,000 டொலர்களுக்கு ஏலம் போன டைட்டானிக் கப்பல் பயணியின் கடிதம்


April 10" 1912.
On board R.M.S "TITANIC"
Dear Mr. Brooks, I
am delighted to receive
your greetings aboard

டைட்டானிக் கப்பல் விபத்துக்குள்ளாகி மூழ்வதற்கு சில நாள்களுக்கு முன்பு அதில் பயணித்த ஒருவர் எழுதிய கடிதம்

இங்கிலாந்தில் நடந்த ஏலத்தில் 400,000 அமெரிக்க டொலர்களுக்கு (+300,000) விற்கப்பட்டு சாதனை படைத்துள்ளது.

கர்னல் ஆர்ச்சிபால்ட் கிரேசி என்ற பயணியின் கடிதம் நேற்று வில்ட்ஷயரில் உள்ள ஹென்றி ஆல்ட்ரிட்ஜ் மற்றும் சன் ஏல நிறுவனத்தில் ஒரு பெயர் குறிப்பிடாத வாங்குபவரால் வாங்கப்பட்டது.

இது எதிர்பார்க்கப்பட்ட விலையை விட ஐந்து மடங்கு அதிக விலைக்கு ஏலம் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அந்தக் கடிதம் 1912 ஏப்ரல் 10 ஆம் திகதி, அவர் சவுத்தாம்ப்டனில் டைட்டானிக் கப்பலில் ஏறிய நாளிலும், வடக்கு அட்லாண்டிக்கில் ஒரு பனிப்பாறையில் மோதி அது மூழ்குவதற்கு ஐந்து நாள்களுக்கு முன்பும் திகதியிடப்பட்டுள்ளது.

# பஹல்காம் தாக்குதல் பயங்கரவாதிகளை இந்தியா வேட்டையாட வேண்டும்

## அமெரிக்க உளவுத்துறை தெரிவிப்பு





பஹல்காம் தாக்குதலில் தொடர்புடைய பயங்கரவாதிகளை வேட்டையாடுங்கள் என்று அமெரிக்க உளவுத்துறைத் தலைவர் துளசி கப்பார்ட் தெரிவித்துள்ளார்.

காஷ்மீரின் பஹல்காமில் நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதலால் 26 சுற்றுலாப் பயணிகள் கொல்லப்பட்டமை மிகுந்த வேதனை அளிப்பதாகவும், இந்த சந்தர்ப்பத்தில் இந்தியாவுக்குத் துணை நிற்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இந்த பயங்கரவாத தாக்குதலில் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கலையும் துளசி கப்பார்ட் கூறியுள்ளார்.



# நுவரெலியா மாவட்டத்தின் பல பகுதிகளில் வெள்ளம்

நிலவும் சீரற்ற வானிலையால் நுவரெலியா மாவட்டத்தின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதனால் விவசாய நிலங்கள் கடுமையாகப் பாதிக்கப் பட்டுள்ளன.

அத்துடன், பிரதான வீதிகள், விளையாட்டு மைதானங் கள் என்பனவும் நீரில் மூழ்கியுள்ளன.

நுவரெலியா – பதுளை பிரதான வீதியில் நீர் நிரம்பிய தால் குறித்த வீதியின் போக்குவரத்து பாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், நுவரெலியா – கண்டி, நுவரெலியா – ஹட்டன் போன்ற பிரதான வீதிகளின் போக்குவரத்தும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

















**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர்.**

**இலங்கையில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட சரித்திரத்தின் ஆரம்பத்தில் - எண்பதுகள் வரை - தாயகத்தில் நின்று நம் இனத்துக்காகப் போராடிய புலமையாளர். விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் தியாகி சிவகுமாரன், புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் உமாமகேஸ்வரன், சுந்தரம் சிறிசபாரத்தினம், சித்தார்த்தன் முதல் டக்ளஸ் தேவானந்தா வரை மூத்த போராளித் தலைவர்கள் எல்லோரோடும் சட்டவாளராகவும், தமிழ் மக்களின் புனர்வாழ்வுப் பணிகளை ஒருங்கிணைக்கும் தொடர்பாளராகவும் நெருங்கிப் பழகியவர். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் தமிழர் தகவல் நிலையம் ஆகியவற்றின் பிதாமகர்களில் ஒருவர். இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட சன்சோனி கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பு வாதங்களையும் சான்றுகளையும் ஒருங்கிணைத்து நெறிப்படுத்தும் அனுசரணை சட்டத்தரணியாகச் செயற்பட்டவர். தற்போதைய நிகழ்வுகள் தொடர்பான அவரது பார்வை அவரது அனுபவங்களிலிருந்து தமிழ் மக்களின் புரிதலுக்காக இங்கு தொடராக வெளிவருகிறது.**

**ஆஸ்திரேலியாவில் புலம்பெயர் தமிழர்களின் சட்டநலன்களில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டு வரும் அவர் முன்னர் ‘காலைக்கதிர்’ நாளிதழின் வாசகர்களால் நன்கு அறியப்பட்ட அரசியல் கட்டுரையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.**

8

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

திருமணமானதும் இருவருக்கும் – லயனல் போபகேக்கும் சித்ராவுக்கும் – பொறுப்புக்கள் வந்தன. கன்னியாஸ்திரி மடத்திலிருந்து வெளியேறியமையால் சித்ரா வருமானம் அற்றவராக போபகேயில் தங்கி இருக்க வேண்டியவரானார். இருவரும் தம்பதிகளாகக் குழந்தை பிறக்கும் வரை, கட்சியின் அங்கத்தினரும் நண்பர்களுமான புத்ததாச விதானாட்சியுடனும் அவரது மனைவியுடனும் தங்கினார்கள். பின்னர் சித்ரா ‘ரெட்பான’ என்ற அமைப்பில், வெடிகுண்டினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறும் பணிகளில் இருந்தார். லயனல் போபகேயும் ‘DEVECO’ என்ற இயந்திர நுட்பவியல் தொழிற்சாலையில் திட்டமிடல் அதிகாரியாகப் பணிக்கு அமர்ந்தார்.


போபகேயும் சித்ராவும்

திருமணப் பொறுப்புகளும், கட்சியில் இருந்த கொள்கை வேறுபாடுகளும் விரக்தியைத் தந்தன. இருவரது வருமானங்களில் கூட வாடகைக்குத் தன்னும் ஒரு வீட்டைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. சித்ரா, அப்பொழுது தங்களது பின்னணிகளினால் வீட்டு உரிமையாளர்கள் வீடுகளைத் தரத் தயங்குவதையும், வருமான நிலையையும் காட்டி அப்பொழுது தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தலைவருக்கு, சீதுவையிலிருந்த வீடமைப்பு அதிகார சபையின் வீடுகளில் ஒன்றைத் தரும்படி விண்ணப்பித்திருந்தார். அதன் தலைவர் சுசில் சிறிவர்த்தன. இவர் விஜயவீரவோடும் லயனல் போபகேயோடும் 1977-இல் சிறை வைக்கப்பட்டு, பின்னர் அவர்களோடு வெளிவந்து, ஐக்கிய தேசியக் கட்சியுடன் நேசமானவர். அவரே தீர்மானத்தை எடுக்கக்கூடிய பதவியில் இருந்தும், கோபகேயும் விண்ணப்பத்தில் கணவனாக இணைக்கப்பட்டமையால் தான் அதனை அமைச்சர் பிரேமதாஸவுக்கு அனுமதிக்காக சமர்ப்பிக்க வேண்டும் என்று காரணம் காட்டி, அவரது பார்வைக்கு அந்த விண்ணப்பம் அனுப்பப்பட்டது. அமைச்சர் பிரேமதாஸவினால் அந்த விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு, குடியிருக்க வீடு தேடும் படலம் தொடர்ந்தது.

கட்சியில் லயனல் போபகேயும் அவரது ஆதரவாளர்களும் தேர்தல்களைக் குறி வைக்காது, கட்சி சமுதாய மாற்றத்துக்கான கட்டமைப்புக்களை விசுவாசமான தொண்டர்கள் மூலம் கிராமங்கள் தோறும் முதலில் விஸ்தரிக்க வேண்டும், மக்களின் பலமான ஆதரவு தேடப்பட வேண்டும், தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்படும் அரச, இராணுவ அடக்குமுறைகள் பற்றி ஒவ்வொரு கிராமத்திலும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும், தேர்தல் கூட்டங்களில் குவியும் மக்கள் விட்டில் பூச்சிகள் மாதிரி தேர்தலின் பின் கலைந்து விடுவார்கள் என்றும் அங்கலாய்த்தனர்.

விஜயவீரவும் அவர்களது ஆதரவாளர்களும் அரசியல் செய்வதற்கான பாதைகளை வகுத்து, சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பின்தள்ளி, தாங்கள் எப்படியும் பெரும்பான்மைக் கட்சிகள் இடையே இரண்டாம் நிலைக்கு வருவதிலேயே குறியாக இருந்தார்கள். இவற்றுக்காக கட்சியில் கொள்கைகள் தொடர்பில் சந்தர்ப்பவாதத்துக்கு ஏற்ப வித்தியாசமான விளக்கங்கள் தந்தமையும் லயனல் போபகே பகுதியினருக்கு ஏமாற்றங்களைத் தந்தது. சமுதாய மாற்றத்திற்கும், அதன் விழிப்

தொடர்ச்சி ▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

புணர்வுக்கும் தேவையான கட்டமைப்புக்களை உருவாக்க அவர்கள் முன் வரவில்லை. லயனல் போபகே – பங்காற்றிய – உருவாக்க விரும்பிய – மனித உரிமைகள் அமைப்புகளில் அவர் பல கத்தோலிக்க கிறிஸ்தவ மதத் தலைவர்களுடனும் மக்களோடும் இணைந்து பழகினார். சிலரது அறி முகங்களுக்கு சித்ராவின் பின்னணி உதவியது. விஜயவீர போன்ற உயர்மட்ட தலைவர்களிடையே சித்ராவில் நம்பிக்கையும் வாஞ்சையும் இருந்தாலும், அடிமட்டத்தில் கட்சியைப் பிளவுபடுத்துவதற்காக கத்தோலிக்க திருச்சபையால் குறி வைக்கப்பட்ட பொறியியல் போபகே சிக்குண்டார் என்ற சந் தேகங்களும் துளிர் விடத் தொடங்கின.

இப்போது – நிகழ்காலங்களில் – பெரும்பான் மைக் கட்சிகளின் பின்னணியில் வீரியம் பெற்று,


சித்ரா

சிங்கள – பௌத்த பேரினவாதத்தை முன்னெடுத்த வர்களான பொது பலசேனா, டான் பிரியசாத்தின் அமைப்புகள் போன்று அந்த நாள்களில் 'பெர முனா' எனப் பொதுவாக அழைக்கப்பட்ட சிறி லங்கா பௌத்த பெரமுனா, சிங்கள மகா பெர முனா, சிங்கள தருண பெரமுனா என்ற அமைப்புக் கள் இயங்கின. அவர்களது அடிப்படை வாதமே நாட்டின் பிரச்சினைகளுக்கு மூல காரணர்கள் தமிழ் இனவாதிகளும், அவர்களுக்கு துணைபோகும் கத்தோலிக்க திருச்சபையும் என்பதே. திருச்சபை பண பலத்துடன் திட்டமிட்ட அடிப்படையில் இயங்கு கிறது. ஊயவாழடஉை யஉவழை என்ற செயற்பாடு தொடர்பில் விழிப்புணர்வை சிங்கள – பௌத்த மக்களுக்கு இவர்கள் தந்து கொண்டிருந்தார்கள். அந்தப் பிரசாரமும், சித்ரா – லயனல் போபகேயை ஒட்டி அடிமட்டக் கட்சி அங்கத்தினர்களிடையே தாக்கங்களை ஏற்படுத்தின. அந்தத் தாக்கங்களும், லயனல் போபகேயின் தாராள மனப்பான்மையின் விவாதங்களுக்கு எதிராக கடும் போக்கு வாதிக ளுக்கு தேவையான நேரங்களில் கை கொடுத் தது.

லயனல் போபகே ஜே.வி.பியில் இணைந்த நாள்களில் இருந்து அவருக்கும் விஜயவீரவுக் கும் நெருங்கிய உறவுகள் இருந்தன. மார்க்ஸீய – லெனினிஸ தத்துவார்த்தங்களையும் உலக நடப் புக்களையும் இருவரும் ஆழமாக படித்தவர்கள். மார்க்ஸீய – லெனினிஸ தத்துவங்களில் தமிழ் மக்களின் தனித்துவ உரிமைகளை விஜயவீர ஏற்றுக்கொண்டாலும், அரசியல் சந்தர்ப்ப லாபங் களுக்கு முன்னுரிமை தந்து, கொள்கைகளின் அடிப்படைகளில் சமுதாய மாற்றத்தை நோக்கி செயல்படாதமை போபகேக்கு மனவேதனைகளைத் தந்து, அந்நியப்படுத்தப்படுகின்ற உணர்வுகளை ஏற்படுத்தின. தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்று கட்சியை வளர்க்க விரும்பியவர்களும் கடும் போக்குவாதிகளும் இணைந்து கொள்கைவாதி களை அந்நியப்படுத்துகின்றனர் என லயனல் போபகேயும் அவரது ஆதரவாளர்களும் கருத்தினர்.

வாசகர்கள் நேற்றைய பதிவில், குற்றம் சாட்டப் பட்ட ஜே.வி.பி. அங்கத்தினர்கள் கை விலங்கி டப்பட்டு அழைத்துச் செல்லப்படுகின்ற படத்தைக் கவனித்திருக்கலாம். அவர்களை இருவர் இருவராக விலங்கிடும் போது விஜயவீரவின் கைகளோடு இணைக்கப்படுவதை சக கைதிகள் விரும்பவில் லையாம். ஏன் பலவந்தப்படுத்தி அப்படி இணைப்பதையும் அவர்கள் எதிர்த்தனர். ஆனால் லயனல் போபகே தானாக முன்வந்து தன்னுடைய கைகளை விஜயவீரவுடன் இணைப்பதற்கு இணங்கி அவர்களது வழக்கு விசாரணைகளுக்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட நாள்களில் எல்லாம் அதுவே நடந்தது. அந்த நட்புக் கூட பின்னர் அரசியலா, கொள்கையா என்ற போராட்டத்தில் நலிவுறத் தொடங்கியது.

அத்தோடு விடுதலைப் புலிகளின் ஆலோசக ராக அமர்ந்த அன்ரன் பாலசிங்கம், சிங்கள இடதுசாரி கட்சிகளை – முக்கியமாக ஜே.வி.பியை – உண்மையான இலட்சியப் பற்றுள்ள புரட்சி வாதிகளாகப் பார்க்காது, அவரது மார்க்ஸீயத் தத்துவங்களில் சந்தர்ப்பவாதிகள் எனவும், தமிழ் மக்களது ஆயுதப் போராட்டங்கள் தொடங்கியதன் மூல காரணங்களை விளங்கிக் கொள்ளாதவர்கள் அல்லது விளங்கிக் கொள்ள விரும்பாதவர்கள் என விமர்சித்தமையும், அப்பொழுது இருந்த களநிலையில் தமிழ் இளைஞர்களது உணர்ச்சிகள் உத்வேகம் அடைகின்ற நேரங்களில், ஜே.வி.பியை சாதகமாகப் பார்த்து இணையும் சூழ்நிலையை விடுதலைக் குழுக்களிடையே – முக்கியமாக விடுதலைப் புலிகள் மத்தியில் – ஏற்படுத்தவில்லை.

விஜயவீர அணியினரின் தேர்தல் மோகமும், அதற்காக அவர்கள், முக்கியமாக இனப்பிரச்சினை பற்றி கட்சி எடுத்த கொள்கை தீர்மானங்களை பிரசாரங்களுக்கு உட்படுத்தாதமையும் லயனல் போபகேயையும் அவரது ஆதரவாளர்களையும் கட்சியிலிருந்து வெளியேறத் தூண்டின. தனது கட்சிச் செயலாளர் பதவியில் இருந்து விலகுகிறார் எனக் கட்சிக்குத்தான் சமர்ப்பித்த நீண்ட கடிதத்தில் அவர் –

"புரட்சிகரமான சிந்தனை கொண்ட எம்போன்ற இயக்கத்துக்கு தமிழ் மக்கள் மத்தியிலே உருவாகி உள்ள ஆயுதம் தாங்கிய இயக்கத்தினருடனும் தொடர்புகளை பேணுவது கடமையாகின்றது. அவர்கள் தங்களது நம்பிக்கைகளில், தொடக்கத்தில் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தாலும், பின்னர் முன்னேற்றகரமான வழிமுறைகளுக்கு அவர்கள் விரும்பி வந்தால், புரட்சிகரமான அமைப்பு ஒன்றுக்கு அவர்களையும் இணைத்து, சரியான கொள்கைகளில் பயணிக்க வேண்டிய பொறுப்பு

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

**தொடர்ச்சி▲**

உண்டு. அதை விட்டு, அவர்களுக்கு எதிரான அரசியல் அடக்குமுறைகளின் தன்மைகளில் அவர்களது தொடர்புகளால் எங்களுக்கு பாதிப்பு வரும் என்று விலக்கி – விலகி – நின்றால் அது நிச்சயமாக இந்த நாட்டின் எதிர்காலத்திற்கான நல்ல அறிகுறி அல்ல. சிறிலங்காவின் புரட்சிகரமான மாற்றத்திற்கான எங்கள் கொடியின் கீழ் தமிழ் மக்களையும் இணைத்துப் பயணிப்பதற்கான ஒரே வழி அவர்களுடன் சேர்ந்து அவர்களுடைய தீர்வுகளுக்காக அவர்களோடு போராடுவதுதான். அவர்களின் பிரச்சினைகளைக் கண்டும் அதிலிருந்து ஓடி ஒளிவதால் எவ்வித பயனும் வரப் போவதில்லை.” – எனக் குறிப்பிட்டார்.

இந்தக் கடிதமும் எதுவித முன்னேற்றங்களையும் தராததால் பெப்ரவரி 1984 இல் ஜே.வி.பியின் எல்லாப் பொறுப்புக்களில் இருந்தும், உறுப்பினர் தகுதிகளில் இருந்தும் விலகினார் லயனல் போபகே.

**(தொடரும்)**



போபகே குடும்பம்

## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

# வடக்கில் 7 எம்.பிக்கள் தேசியக் கட்சியில் வருவதற்குக் காரணம் தமிழரசு கட்சிதான்!

## சிவசக்தி ஆனந்தன் குற்றச்சாட்டு



**(கி.வசந்தன்)**

வடக்கில் ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேசியக் கட்சியில் வருவதற்குத் தமிழரசுக் கட்சியே காரணம் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் செயலாளர் நாயகமுமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் சார்பில் பூந்தோட்டத்தில் குடியிருப்பு வட்டாரத்தில் போட்டியிடும் வேட்பாளரை ஆதரித்து நேற்று இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

இன்று வட மாகாணத்தில் ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேசிய மக்கள் சக்தியில் வருவதற்கு காரணம் தமிழரசு கட்சியே ஆகும். அவர்களின் செயற்பாடுதான் இன்று ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டு வந்துள்ளது.

நிறைவேற்று அதிகாரம் உள்ள ஒரு ஜனாதிபதி இன்று உள்ளூராட்சி மன்றங்களையும் தங்களுக்கு தருமாறு கூறுவது எந்த வகையின் நியாயமாக இருக்கும்? நாங்கள் எங்கள் பிரதேசத்தில் வாழ்பவர்களுக்கும், உங்களோடு வாழ்பவர்களுக்குமே உள்ளூராட்சி மன்ற தேர்தலில் வாக்கை அளித்து ஆதரிக்க வேண்டும்.

நாங்கள் எங்களுடைய தமிழ் கட்சிகளை ஆதரிக்க வேண்டிய தேவை இருக்கிறது. தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் வாக்குச்சீட்டு என்பது வெறும் காகிதம் அல்ல. அது பல வலிகளையும் வேதனைகளையும் சுமந்த ஒரு விடயம். இத்தனை ஆயிரம் போராளிகளையும், மக்களையும் இழந்து விட்டு இன்று தேசிய கட்சி ஒன்றின் பின்னால் செல்ல முடியாது. அவ்வாறு இருக்குமாக இருந்தால் எமது போராட்டம் வீணானதாக இருக்கும். – எனத் தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபை
தேர்தல் களம்

VOTE

# வவுனியா வடக்கு பிரதேச சபை நிர்வாகம் ஆளும் தரப்புக்குப் போனால் பேராபத்து!

## இனப்பரம்பலை மாற்றியமைக்கின்ற வேலையை இலகுவாகச் செய்வர் என சுமந்திரன் எச்சரிக்கை



(கி.வசந்தன்)

மத்தியிலே ஆளும் தரப்பிற்கு வவுனியா வடக்கு பிதேச சபையின் ஆட்சி அதிகாரம் போகுமாக இருந்தால் இனப்பரம்பலை மாற்றியமைக்கும் வேலையை இலகுவாக நடைமுறைப்படுத்துவார்கள் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியா புளியங்குளத்தில் நேற்று இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

வவுனியா வடக்கில் போருக்குப் பின்னர் கடும் வேகத்தில் குடியேற்றச் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. வவுனியா வடக்கு பிரதேச சபையில் கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தமிழரசுகட்சிக் ஆட்சியமைப்பதற்காக நாம் பல்வேறு செயற்பாடுகளை எடுத்திருந்தோம்.

இன்று நிலைமை மாறியிருக்கிறது. நாட்டிலே ஆட்சி செய்யும் ஓர் அமைப்பு இந்தப் பிரதேச சபையைக் கைப்பற்றுவதற்கு போட்டியிடுகின்றது. எனவே மத்தியிலே ஆளும் தரப்பிற்கு இந்தப் பிரதேச சபையின் ஆட்சி அதிகாரம் போகுமாக இருந்தால் இனப்பரம்பலை மாற்றியமைக்கும் வேலையை இலகுவாக நடைமுறைப்படுத்துவார்கள்.

நாடாளுமன்றில் எங்களுக்கு அடுத்தபடியாக இருந்த ஒரு கட்சி இன்று தேர்தல் மூலம் தனிப்பெரும்பான்மை பெற்று ஆட்சி அமைத்துள்ளது. ஊழல், துஷ்பிரோயகம் என்று மாறிமாறி ஆட்சி செய்த தரப்பின் மீது மக்களுக்கு வெறுப்பு இருந்தது. எனவே அவர் 42 சதவீதம் வாக்குகளை எடுத்திருந்தாலும், மாற்றம் வருகின்றது என்ற எதிர்பார்ப்பிலே அடுத்து வந்த நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மைப் பலத்தை மக்கள் கொடுத்தனர்.

அந்த வகையில் சாணக்கியனின் தனி முயற்சியினால் கிழக்கு தப்பிவிட்டது. துரதிஷ்ட வசமாக வடக்கிலும் அரசாங்கம் வெற்றி பெற்றிருக்கிறது. ஆனால் எப்படியான முடிவு நாடாளுமன்றத் தேர்தலில் வந்திருந்தாலும் அங்கு மூன்றாவது பெரிய கட்சியாக இருப்பது தமிழரசுக் கட்சியே. ஒரு குடியும் மூழ்கி போகவில்லை. குறைந்திருக்கிறதுதான். ஆனாலும் நாங்கள்தான் இன்றும் பிரதான தமிழ்கட்சி. அதில் மாற்றம் இல்லை.

தேர்தல் முறைமையினால் ஏற்பட்ட பிரதிபலனை வைத்து தமிழ் மக்களின் ஆணையும் எங்களுக்குத்தான் இருக்கிறது, ஆகவே தமிழ்த் தேசியப் பிரச்சினையைத் தாங்கள் பார்த்துக் கொள்வோம் என்று கூறும் அவர்கள், அதிகாரப் பகிர்வில் நம்பிக்கை இல்லாதவர்கள். வடக்கு – கிழக்கு இணைப்பையும் பிரித்தவர்கள். அவர்கள் தமிழர்களின் ஆணை எங்களிடம்தான் இருக்கிறது என்று சொன்னால் அதைவிட அபத்தம் வேறு எதுவுமில்லை. அதைவிட மோசமான ஆபத்து எதுவும் கிடையாது. அந்த ஆபத்தை உடனடியாக நீக்க வேண்டும்.

எனவே நாடாளுமன்றத் தேர்தலுக்கு பின்னரான முதலாவது சந்தர்ப்பம் இந்த உள்ளூராட்சித் தேர்தல். இதில்தான் அதனைப் புறந்தள்ள முடியும். எமக்கு ஒற்றை ஆட்சியிலே இணக்கமில்லை. முறையான அதிகாரப் பகிர்வு வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கைகளின் உறுதியான மக்கள் தீர்ப்பு தேர்தல்களில் இருந்தே வருகின்றது.

எனவே, கடந்த தேர்தல் மயக்கத்தை ஏற்படுத்தியிருந்தாலும் அதனைக் களையக்கூடிய முதலாவது சந்தர்ப்பமாக இது உள்ளது. உள்ளூரின் ஆட்சியை கூட நாங்கள் தக்கவைக்க முடியாவிட்டால் தமிழ் மக்களின் அரசியல் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்று பரப்புரை செய்யக்கூடும். எனவே நாட்டுக்கும் உலகுக்கும் தெளிவான ஒரு செய்தியை சொல்லக்கூடிய ஒரு சந்தர்ப்பம் இது. அதனை நாம் நழுவ விடக்கூடாது.

எங்களுக்கு தேவை தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாசை அப்பிடியே தான் இருக்கிறது, அதில் மாற்றம் இல்லை என்று சொல்லுவதுதான். அதைச் சொல்லுவது எப்படி? வாக்குகளை சிதறடித்துவிட்டுச் சொல்ல முடியாது.

எனவே அதனை ஒருமுகப்படுத்தி, சமஷ்டி என்ற ஒரே நிலைப்பாட்டில் இருக்கும் தமிழரசுகட்சிக்கு அந்த வாக்குகளை கொடுத்தால் எங்கள் அரசியல் நிலைப்பாட்டில் ஒரு உறுதி இருக்கும். எமது நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை என்ற கனமான செய்தி சொல்லப்படும். அது கேட்கப்படும். அதுவே பலமான தாக இருக்கும். – என்றார்.

## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

VOTE

# அரசுத் தரப்பு வன்னி எம்.பி. மீது ஊழல் குற்றச்சாட்டு அது தொடர்பில் ஜனாதிபதி பொறுப்புக் கூறுவாரா?

### புளியங்குளம் பரப்புரைக் கூட்டத்தில் சாணக்கியன் எம்.பி. கேள்வி



**(கி.வசந்தன்)**

வன்னி மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டு இருக்கிறது. அவர்கள் அரச ஊழியராக இருந்த போது பெண்களுக்கான வாழ்வாதாரத் திட்டத்திற்காக வந்த நிதியை மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன. விசாரணை செய்யப்பட்டுள்ளது. இவை தொடர்பாக ஜனாதிபதி பொறுப்புக் கூறுவாரா என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கேள்வி எழுப்பியுள்ளார்.

வவுனியா, புளியங்குளத்தில் நேற்று இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் ஓரணியாக நின்றால் மாத்திரமே எமக்கு நிரந்தரமான ஓர் அரசியல் தீர்வு இந்த நாட்டிலே வரும் என்ற நம்பிக்கையில் வாழ முடியும். இல்லை என்றால் பலமிழந்த ஒரு சமூகமாகவே நாங்கள் தொடர்ந்தும் இருப்போம். தமிழரின் இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்காக தமிழரசுக்கட்சி மாத்திரே இன்று நேர்மையாக செயற்பட்டு வருகின்ற ஒரு கட்சி. அதற்கு பல உதாரணங்களைக் கூறலாம்.

எங்கள் பிரச்சினைகள் பற்றி சர்வதேச சமூகத்திடம் நாங்கள் மாத்திரமே குரல் கொடுக்கிறோம். அண்மையில் வருகை தந்த பாரதப் பிரதமரை நாம் சந்தித்தோம். அவரை சந்திப்பதற்கு எமது கட்சியை சேர்ந்தவர்களும், ஏனைய தமிழ்த் தேசிய பிரதிநிதிகளையும் மக்கள் நாடாளுமன்றம் அனுப்பாவிட்டால் அவரை சந்திக்கும் அரசின் குழுவில் சிங்களவர்கள் மாத்திரமே அங்கம் வகித்திருந்தார்கள். அவர்கள் அந்த ரவுடி அமைச்சரையாவது கொண்டு போயிருக்கலாம்.

அண்மையில் முல்லைத்தீவில் மீனவ சங்கத் தலைவர் மீது ரவுடி அமைச்சரின் கும்பல் பலமான தாக்குதலை செய்திருக்கின்றது. அவரது அடாவடித் தனத்தை காட்டியும் வன்னி மண்ணில் அடிவாங்காமல் போயுள்ளார் என்றால் அதற்குக் காரணம் அமைச்சர் என்ற பதவிக்கு அந்த மக்கள் மரியாதை கொடுத்துள்ளனர் என்பதுதான்.

இந்த ரவுடி அமைச்சரின் தலைவரான ஜனாதிபதி மாங்குளம் சென்றிருந்தார். அங்கு ஒரு தொழிற்பேட்டை வலயம் ஒன்றை அமைப்பதாகச் சொல்லியிருக்கிறார். ஆனால் நாடாளுமன்றில் வரவு – செலவுத் திட்ட விவாதத்தில் மாங்குளம் என்ற வார்த்தையே வரவில்லை. எனவே தேர்தலுக்காக சொல்லும் பொய் வார்த்தைகளே இவை.

சிங்கள மக்களும் ஜனாதிபதி சொல்வது போல ஒரு தாய் பிள்ளைகளாக வாழலாம்என்றமனநிலையில்இருக்கின்றார்கள் என நான் நம்பவில்லை. இனவாதிகளான கோட்டபாய அரசாங்கம் தங்களுடைய இனவாதப் பணியை சரியாக செய்ய தவறியமையாலே இன்று இந்த இனவாதிகளுக்கு அந்த மக்கள் வாக்களித்துள்ளனர்.

கோட்டாவை விட மோசமான இனவாதிகள் இவர்கள். சிங்களப் பேரினவாத நாடாக தொடர்ந்து இலங்கையை வைத்திருப்பதே அவர்களது எண்ணம். அதற்குத் தடையாக இருப்பவர்கள் இலங்கை தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களே.

இதனை மக்கள் மனதிலே வைத்திருக்க வேண்டும். எதிர்வரும் தேர்தலில் அதனை வெளிப்படுத்த வேண்டும். மக்களின் ஆதரவு எமது கைகளுக்கு வந்தால் மாத்திரமே நாங்கள் செய்யும் போராட்டம் வலுவானதாக இருக்கும்.

ஊழல்வாதிகள் இல்லாத அரசு என்றார்கள். வன்னி மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டு இருக்கிறது. அவர்கள் அரச ஊழியர்களாக இருந்த போது பெண்களுக்கான வாழ்வாதாரத் திட்டத்திற்காக வந்த நிதியை மோசடி செய்தார் எனக் குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன. விசாரணை செய்யப்பட்டுள்ளது.

இது போல பல விடயங்களை நான் நாடாளுமன்றிலே தெரிவித்துள்ளேன். ரவுடியாக செயற்படும் அமைச்சர்கள் உள்ளனர். எனவே ஜனாதிபதி இதற்கெல்லாம் பொறுப்புக்கூறா விட்டால் இந்தத் தேர்தலில் இந்த அரசு தோல்வியடைவதை எவராலும் மாற்ற முடியாது. – என்றார்.

## உள்ளூராட்சி சபை
# தேர்தல் களம்

# புளியங்குளத்தில் தமிழரசு பரப்புரை

(கி.வசந்தன்)

இலங்கை தமிழரசு கட்சியின் வவுனியா வடக்கு பிரதேச சபைக்கான பிரச்சாரக்கூட்டம் நேற்று புளியங்குளத்தில் இடம்பெற்றிருந்தது.

தமிழரசுக் கட்சியின் வவுனியா வடக்கு வேட்பாளர் த.தனுசன் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ப.சத்தியலிங்கம், இரா.சாணக்கியன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளருமான சுமந்திரன் மற்றும் தமிழரசு கட்சியின் வவுனியா வடக்கு பிரதேச சபையின் வேட்பாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.











## உள்ளூராட்சி சபை
## தேர்தல் களம்

# தமிழர்கள் எல்லோரும் தமிழரசின் பக்கம் என்ற வலுவான செய்தியை தேர்தலில் சொல்லவேண்டும்

## ரவிகரன் எம்.பி. வலியுறுத்து





**(விஜயரத்தினம் சரவணன்)**

எதிர்வரும் உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தலில் தமிழ் மக்கள் அனைவரும் ஒருமித்து வீட்டுச் சின்னத்திற்கு புள்ளடியிடுவதன் மூலம் தமிழர்கள் எல்லாம் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் பக்கம் என்ற வலுவான செய்தியை ஆட்சியாளர்களுக்கு உரத்துக் கூறவேண்டுமென வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு – கரைதுறைப்பற்று உள்ளூார் அதிகாரசபைக்குட்பட்ட குமுளமுனை வட்டாரத்தில் நேற்று இடம்பெற்ற இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் தேர்தல் பரப்புரைக்கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

எமது தமிழ்க் கிராமங்கள் பெரும்பான்மையின ஆட்சியாளர்களோடு இல்லை, தமிழ் மக்களின் பாரம்பரிய கட்சியான தமிழ் அரசுக் கட்சியுடன்தான் தொடர்ந்தும் தமிழ்க் கிராமங்கள் இருக்கின்றன என்பதை தமிழ் மக்கள் உரத்தகுரலில் இந்த ஆட்சியாளர்களுக்குக் கூறுகின்ற தேர்தலாக இம்முறை உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல் அமைகின்றது.

அந்த வகையில் வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப் பரப்பிலுள்ள எமது கிராமங்கள் அனைத்தும் தமிழ் அரசுக்கு அமோகமாக வாக்குச்செலுத்தவேண்டும்.

குறிப்பாக இந்தப் பகுதியில் அமைந்துள்ள எமது பூர்வீக வழிபாட்டிடமான குருந்தூர்மலைக்காகவும், அங்கு இடம்பெறும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகவும், சைவமக்களின் வழிபாட்டு உரிமைக்காகவும், தமிழ் அரசுக் கட்சியினரான நாமே தொடர்ந்து போராடி வருகின்றோம்.

இவ்வாறான ஆக்கிரமிப்புக்ளுக்கு எதிராக பெரும்பான்மையினக் கட்சிகளால் எமக்கு ஆதரவாகச் செயற்படமுடியாது. பெரும்பான்மையினக் கட்சிகளுக்கு வாக்குச் செலுத்துவதன்மூலம் எமது பூர்வீக பாரம்பரிய இடங்கள் அனைத்தும் பறிபோகும் நிலையே ஏற்படும்.

அதேவேளை எந்த பெரும்பான்மை இனத்தவர்களும் தமிழர்களுக்கு வாக்களிப்பதில்லை. ஆனால் தமிழ் மக்களில் சிலர் பெரும்பான்மையினக் கட்சிகளுக்கு வாக்குச்செலுத்துகின்ற கலாசாரம் காணப்படுகின்றது.

எமது கட்சிக்குள் பிரச்சினைகள் காணப்படுகின்றன. அந்தப்பிரச்சினைகள் சீர்செய்யவேண்டும். நிச்சயமாக எதிர்காலத்தில் அப்பிரச்சினைகள் சீர்செய்யப்படும்.

ஒற்றையாட்சிமுறை இலங்கையில் தமிழர்கள் உரிமைகளுடன் வாழ்வதற்கு ஏற்றதல்ல என்ற அடிப்படையில், சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்து தந்தை செல்வாவினால் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி உருவாக்கப்பட்டது. அதன்பின்னர் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வீட்டுச் சின்னமே தமிழர்களின் அடையாளம் என தலைவராலும் தமிழ் மக்களிடம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

அந்த வகையில் வீடு என்பது தமிழர்களின் அடையாளமாகும். தமிழ் அரசுக் கட்சி தமிழர்களின் கட்சியாகும்.

தற்போது நாடாளுமன்றில் அதிக உறுப்பினர்களைக்கொண்ட கட்சிகளின் வரிசையில் மூன்றாவது நிலையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியே காணப்படுகின்றது.

அந்த வகையில் தற்போதும் தமிழர்களின் உரிமைகள் தொடர்பில் தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களே கரிசனையுடன் பேசுகின்றனர்.

குறிப்பாக தமிழர்களது அரசியல் தீர்வு, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், அரசியல் கைதிகளின் விடுவிப்பு, நில ஆக்கிரமிப்பு விவகாரங்கள் எனத் தமிழர்களின் பிரச்சினைகள், உரிமைகள் தொடர்பாக எமது தமிழ் அரசுக் கட்சியே அதிக கரிசனையோடு செயற்படுகின்றது.

ஆகவே இந்த உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலில் தமிழ் மக்கள் தமிழ் அரசுக் கட்சிக்கு அமோகமாக வாக்களித்து தமிழ் மக்கள் எப்போதும் தமிழ் அரசுடனேயே இருப்பார்கள் என்ற வலுவான செய்தியை ஆட்சியாளர்களுக்குச் சொல்லவேண்டும் – என்றார்.



## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

# மஹிந்தவுடன் இருந்த பிள்ளையானுக்கு நடப்பது என்.பி.பியுடன் இருப்பவர்களுக்கு நாளை நடக்கும்!

### தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சுகாஸ் களுவங்கேணியில் தெரிவிப்பு

(கனகராசா சவணன்)

இன்று கோமாளிகளின் ஆட்சி நடந்து கொண்டிருக்கின்றது. என்.பி.பி. என்றால் தேசிய மக்கள் சக்தி என்று நினைக்கின்றனர். ஆனால் அப்படியல்ல. என் – “நாங்கள்“, பி – “பேசியவை“ எல்லாம், பி – “பொய்“. அதாவது “நாங்கள் பேசுவது எல்லாம் பச்சை பொய்“ என்பதுதான் அர்த்தம். எனவே அந்தப் புழுகு மூடைகளுக்குத் தமிழ் மக்கள் அடி பணியக் கூடாது. அன்று மஹிந்தவோடு இருந்த பிள்ளையானுக்கு இன்று நடப்பது இன்று என்.பி.பி. யோடு இருக்கின்ற உங்களுக்கும் நாளைக்கு நடக்கும். ஆகவே சிந்தியுங்கள் எனத் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடக பேச்சாளரும் சட்டத்தரணியுமான க.சுகாஸ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கல்குடா தேர்தல் தொகுதியில் ஏறாவூர்ப்பற்று பிரதேச சபைக்கு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி மற்றும் தமிழ் மக்கள் பேரவை என்பன இணைந்து சைக்கிள் சின்னத்தில் களமிறங்கியுள்ள வேட்பாளர்களின் அறிமுகக் கூட்டம் களுவங்கேணியில் மாவட்ட அமைப்பாளர் த.சுரேஸ் தலைமையில் இடம்பெற்றது. அந்த நிகழ்வில் கலந்துகொண்ட சட்டத்தரணி க.சுகாஸ் உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

“என்னடாதம்பி கதைக்கிறான்கள்? சந்திவெளியிலை எப்படியடா நேற்றைய அடிகதிரவெளியிலை...?“ என அன்று வடக்குக் கிழக்கில் ஒலித்த பாடல் அப்படி இருந்தது கிழக்கு. ஜெந்தன் படையணியை வடக்கிற்கு வந்தால் சங்கு சக்கரம் சூழலும். யாழ், மன்னார், முல்லைத் தீவு, கிளிநொச்சி, வவுனியாவில் அவர்களின் சாதனைகள் பலப்பல. எனவே கிழக்கு மக்கள் வீரர்கள் என வடக்கு மக்களாகிய நாங்கள் பெருமையோடு சொல்லுவோம். அப்படியான மாவீரர்களை – தளபதிகளை – தலைவருக்கு விசுவாசமான தொண்டர்களை – கொண்ட மண்ணை பார்த்து வியந்திருக்கின்றோம்.

ஆனால் அந்த மண்ணை இடையிலே வந்த புல்லுருவிகளும், பதவிகளுக்கு விலை போனவர்களும், தமிழ் தேசியத்தை அடைவு வைத்தவர்களும், பதவிகளுக்காக மண்ணை கோடி கோடியாக விற்று, அன்று மகிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்கவுக்கு உங்களுடைய மண்ணையும் மக்களையும் காட்டிக் கொடுத்தவர்கள் இன்று கம்பி எண்ணிக் கொண்டிருக்கின்றனர்.

பிள்ளையானும் வியாழேந்திரனும்



கம்பி எண்ணியும் சிலர் இங்கும் திருந்தவில்லை. அங்கும் திருந்தவில்லை. இன்று மஹிந்தவினுடைய மறுபுறமான ஜே.வி.பியுடன் கொஞ்சிக் குலாவிக் கொண்டிருக்கின்றனர். இன்று ஜே.வி.பி க்கு கூசா தூக்குகின்ற – காவடி எடுக்கின்ற – சகோதர்களுக்கு நாங்கள் அனுதாபத்துடன் சொல்லுகின்றோம். இன்றைக்குப் பிள்ளையானுக்கும் வியாழேந்திரனுக்கு நடந்து கொண்டிருப்பது – நாளைக்கு வடக்கில் டக்ளஸ் தேவானந்தாவுக்கு நடக்கபோவது – உங்களுக்கும் நடக்கும்.

அன்று மஹிந்தவோடு இருந்த பிள்ளையானுக்கு இன்று நடப்பது, இன்று என். பி.பியோடு இருக்கின்ற உங்களுக்கு நாளைக்கு நடக்கும். சிந்தியுங்கள். இனத்தைக் காட்டிக் கொடுக்காதீர்கள். ஏன் என்றால் எமது இனத்தின் வரலாறு இரத்தத்தாலும் மரணங்காலாலும் விதைக்கப்பட்டது. உலகத்திலே எந்தவொரு நாட்டினுடைய தலைவர்களும், எந்தவொரு போராளித் தலைவரும் தனது குடும்பத்தோடு யுத்தம் நடந்த பூமியிலே இறுதிவரை இருந்த வரலாறு கிடையாது. ஆனால் எற்களுடைய தலைவன் இருந்தான். அந்தத் தலைவனுக்கு ஆயிரம் ஆயிரம் மாவீரர்கள். அவர்களில் பெரும்பாலானவர்கள் கிழக்கு மண்ணிலே இருந்தனர். எனவே அந்த மண்ணில் இருந்தவர்கள் தயவு செய்து துரோகம் செய்யாதீர்கள்.

தமிழனுக்கு என இருந்த யாழ்ப்பாணம், அம்பாறை, கிளிசொச்சி, முல்லைத் தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு மாவட்டம் எங்கே? இன்று அம்பாறை பெரும்பான்மை பறிபோய் விட்டது. திருகோணமலை முக்கால்வாசி பறிபோய் விட்டது. மிஞ்சி இருப்பது மீன்பாடும் தேன் நாடான மட்டக்களப்பு. இதையும் நாங்கள் பறிபோக விடுவோமாக இருந்தால் கிழக்கு ஒட்டு மொத்தமாகப் பறிபோய்விடும். இதுதான் உண்மை. பொய் சொல்லி வெல்வதைவிட உண்மையைச் சொல்லி தோற்றுப் போகும் கஜேந்திரகுமார் தலைமையில் இருப்பவர்கள் நாங்கள்.

மட்டக்களப்பில் எல்லைக் கிராமமான மாதவனை, மயிலத்தமடு கிராமத்தில் தொளாயிரம் தமிழ்க் குடும்பங்களை விரட்டியடித்தனர். எனவே இறுதி வரை இந்த மண்ணுக்காக போராடுவோம். குரல் கொடுப்போம். அதேவேளை இந்த மண்ணைப் பாதிக்காத அபிவிருத்திக்குக் குரல் கொடுப்போம். எங்களுடைய அபிவிருத்தி தமிழ் தேசத்தை வளப்படுத்தும். ஒரு போதும் மணலைக் கொள்ளையடிக்கவோ, இனத்தைக் காட்டிக் கொடுக்கவோ மாட்டோம். சலுகைகளுக்கு அடி போக மாட்டோம்.

தேங்காய் 250 ரூபாவை தாண்டிவிட்டது என அமைச்சரிடம் கேட்டபோது குரங்குகள் தேங்காயை சாப்பிடுவதாகத் தெரிவித்தார். அதேபோல அரிசி விலை ஏறிவிட்டது எனக் கேட்டபோது அதற்கான அமைச்சர் அரிசியை நாய், பூனை சாப்பிடுகின்றது என்கிறார்கள். இவர்கள் நாய்களிலும் குரங்குகளிலும் பழி போடுகின்ற பொறுப்பற்ற அமைச்சர்கள். நாய், குரங்கில் தவறில்லை. இந்த ஆட்சியைச் செய்கின்ற ஜே.வி.பியில் தவறு.

என் பி.பி என்றால் அதன் அர்த்தம் பேசுவது எல்லாம் பச்சை பொய். எனவே அந்த புழுகு மூடைகளுக்கு இந்த மண் அடிபணியக் கூடாது. இந்தக் கிழக்கு மண்ணிலே தமிழ் தேசியத்துக்காக கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தலைமையிலான அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி சைக்கிள் சின்னத்துக்கு வாக்களிக்கவும். இதனால் இந்த மண்ணில் இனம் வாழும். தமிழ் ஆளும். – என்றார்.

## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

# யாழ்ப்பாணத்துத் தமிழ் மக்களுக்கு இந்தத் தேர்தல் மானப் பிரச்சினை!

### சுன்னாகக் கூட்டத்தில் சாணக்கியன் விளக்கம்



(பிரபாகரன் டிலக்சன்)

ஏனைய தமிழ்க் கட்சிகளை நாங்கள் விமர்சிக்க விரும்பவில்லை. ஆனால் ஏனைய தமிழ்க் கட்சிகள் எங்களை விமர்சிக்கின்றார்கள். நாங்களும் கட்சியின் கட்டளையை மீறி எங்களை விமர்சிக்கும் கட்சிகளை நாங்களும் விமர்சிக்க வேண்டிவரும். எனவே யாழ்ப்பாணத்திலிருந்து எச்சரிக்கையாக கூறுகின்றேன். உங்கள் கட்சிக் கொள்கையை சொல்லி வாக்கு கேளுங்கள். - என நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாணக்கியன் தெரிவித்தார்.

நேற்றையதினம் சுன்னாகத்தில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழனத்திற்கு முக்கியமான தேர்தலாக இந்தத் தேர்தல் இருக்கின்றது. யாழ்ப்பாணத் தமிழ் மக்களுக்கு மானப் பிரச்சினையாக இந்தத் தேர்தலை பார்க்கின்றேன். யாழ்ப்பாண தமிழ் மக்கள் என்றால் கல்விக்கு பெயர் போனவர்கள். தற்போதைய உயர்தரப் பரீட்சை முடிவுகள்கூட அதனை வெளிக்காட்டுகின்றது. கடந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் உலகம் முழுவதும் கேள்வியை எழுப்பியுள்ளன. இதனை நிவர்த்தி செய்ய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அந்த மாற்றத்தைக் காட்ட தமிழரசுக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும். வேறு கட்சிகளுக்கு வழங்கப்படும் வாக்குகள் வீணாகவே போகக் கூடும்.

என்.பி.பி. அரசு கடந்தகால அரசாங்கங்களை விட மிக மோசமாகச் செயற்படுகின்றது. தேர்தல் சட்டங்களை மீறிச் செயற்படுகின்றது. வவுனியா வைத்திய சாலைக்குச் சென்ற சுகாதார அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ தேர்தல் விதிகளை மீறியிருக்கிறார்.

கிழக்குப் பல்கலைக்கழகப் பேரவைக்கு சிங்கள பெரும்பான்மையினரையே நியமித்திருக்கிறார்கள். இந்த அரசாங்கமும் சிங்களமயமாக்கலை தொடர்கின்றது. தேர்தல் காலங்களில் மாத்திரமே தமிழ் மக்களுக்கும் தமிழ் பிரதிநிதிகளுக்கும் முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. அதன்பின் தமிழர்களை பற்றி அக்கறை கொள்வதில்லை.

தேசிய மக்கள் சக்தியின் கைகளில் உள்ளூராட்சி சபைகள் சென்றால் உதாரணமாக கே.கே.எஸ். வீதியை ஏ.கே.டி வீதியாகக் கூட மாற்றக்கூடும். அவ்வாறு மாற்றினால் நாடாளுமன்ற உறுப்பினர்களால் கூட எதிர்த்துக் கதைக்க முடியாது. உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்களும் எதிர்த்து கதைக்க முடியாது. எல்லா முடிவுகளையும் பிமல் ரத்தநாயக்கவும், றில்வின் சில்வாவுமே எடுப்பார்கள்.

நாடாளுமன்றத்தில் கூட என்.பி.பி. தமிழ் எம்.பிக்களுக்கு உரையாற்ற சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை. பேசச் சந்தர்ப்பம் கொடுத்தாலும் இதற்கு விடுங்கள் அதற்கு விடுங்கள் என்கிறார்கள். மக்களின் பிரச்சினையைப் பேச முடியாதவர்களாக இருக்கிறார்கள்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் அனைவருமே தமிழ் மக்களுக்காக பணியாற்றுபவர்கள். நிரந்தர அரசியல் தீர்வைப் பெற எங்கள் கட்சியினர் முயற்சிப்பார்கள். ஆனால் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு அவசியம் இல்லை என்று வாதிடுவார்கள். இதனை நாடாளுமன்றில் பார்க்க முடியும்.

நாடாளுமன்றத்தில் தமிழ்ப் பிரதிநிதிகள் பேச எழுந்து நின்றால் 'நாங்கள் தான் தமிழ் மக்களின் பிரதிநிதிகள்' என தேசிய மக்கள் சக்தியினர் கூறுகின்றனர். ஆனால் அவர்களின் கட்சியிலிருக்கும் தமிழ்க் எம்.பிக்களிடம் ஆலோசனை கூட பெறுவதில்லை. இந்த நிலைமைதான் உள்ளூராட்சி சபைகளிலும் தொடரும்.

கிழக்கு மாகாண சபையில் பிள்ளையான் ஆட்சி செய்தபோது மாகாண சபைகளின் அதிகாரங்கள் பறிக்கப்பட்டன. கொழும்பிலிருந்து வரும் கட்டளைகளுக்கு ஏற்ப அவர் செயற்பட்டார். அதைப் போலவே தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றாலும் நடைபெறும்.

தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தால் வலி வடக்கில் காணி விடுவித்த காணிகளைக் கூட இராணுவத்தினருக்காக மீளக் கைப்பற்றக் கூடும். அதைத் தடுக்க முடியாத நிலையில்தான் தேசிய மக்கள் சக்தியின் தவிசாளர் காணப்படுவார்.

தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் இராஜினாமாக் கடிதத்தை பெற்றிருக்கின்றார்கள் தகவல்கள் வெளிவந்திருக்கின்றன. குறிப்பாக யாழ் மாவட்டத்தில் தெரிவாகிய மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் இராஜினாமாக் கடிதம் பெறப்பட இருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கின்றேன். அது உண்மையாகவும் இருக்கலாம். நாடாளுமன்றத்தில் அவர்கள் பேசுவதைக் காண முடிவதில்லை.

ஜனாதிபதி இன்று தங்கள் கட்சியில் தான் ஊழல்வாதிகள் இல்லை என்கிறார். ஆனால் மட்டக்களப்பில் வீதி மின் விளக்குகளை பொருத்துவதற்கு மதுபானப் போத்தல் கேட்கும் முன்னாள் உறுப்பினர் ஒருவர் அவர்கள் கட்சியில் போட்டியிடுகின்றார். இவ்வாறான வேட்பாளர்களை வைத்துக்கொண்டு ஊழல் பற்றி ஜனாதிபதி பேசுகின்றார்.

ஜனாதிபதிக்கு இன்றைய நாளுக்கான பொய்கள் பட்டியல் என ஒரு பட்டியல் வழங்கப்படும். அவர் அதனை வாசித்துவிட்டு போகின்றார். அவர் கூறும் அத்தனையும் நடைமுறைப்படுத்த முடியாத பொய்கள். நாட்டின் பொருளாதார நிலைமைகள் தொடர்பில் சிறிதேனும் தெரிந்திருந்தால் இவ்வாறான பொய்கள் வழங்கப்பட்டிருக்கா.

அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்போவதாகக் கூறினார்கள். ஆனால் கூறிய சம்பள உயர்வு வழங்கப்படவில்லை. நாட்டில் போதிய நிதி இல்லை.

நிதி இல்லாத நாட்டில் மன்னாரில் இருந்து புத்தளம் வரையான 90கிலோ மீற்றர் வீதி அமைக்கப்போவதாகவும், யாழ்ப்பாணத்தில் சர்வதேச மைதானம் அமைக்கப் போவதாகவும், மாங்குளத்தில் தொழிநுட்பம் வலயம் உருவாக்கப் போவதாகவும் ஜனாதிபதி கூறுகின்றார். இவற்றுக்கு எங்கிருந்து நிதி கிடைக்கப் போகின்றது?

அதுபோல் பிமல் ரத்நாயக்கவும் பொய்யான வாக்குறுதிகளை வழங்குகின்றார். தீவுப் பகுதிகளுக்கு சென்று குடிதண்ணீர் தருவதாக மக்களின் வாக்குகளை பெறப் பொய் சொல்கின்றார். ஆனால் வரவு - செலவுத் திட்டத்தில் இதற்கு நிதி ஒதுக்கப்படவில்லை.

ஏனைய தமிழ்க் கட்சிகளை நாங்கள் விமர்சிக்க விரும்பவில்லை. ஆனால் ஏனைய தமிழ்க் கட்சிகள் எங்களை விமர்சிக்கின்றார்கள். மட்டக்களப்பு மண்டூரில் தமிழரசுக் கட்சிக்கு மக்கள் பாடம் புகட்ட வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தலைவர் கஜேந்திரகுமார் தெரிவித்திருக்கிறார். கிழக்கில் பிள்ளையானுக்கும், தேசிய மக்கள் சக்திக்கும் வடக்கு, கிழக்கில் டக்ளஸ் தேவானந்தாவிற்கும் பாடம்புகட்டியிருக்கலாம். அதைவிடுத்து இலங்கை தமிழரசுக் கட்சியை விமர்சிப்பது ஏன்?

நாங்களும் கட்சியின் கட்டளையை மீறி எங்களை விமர்சிக்கும் கட்சிகளை நாங்களும் விமர்சிக்க வேண்டிவரும். எனவே யாழ்ப்பாணத்திலிருந்து எச்சரிக்கையாகக் கூறுகின்றேன். உங்கள் கட்சிக் கொள்கையைச் சொல்லி வாக்குக் கேளுங்கள்.

நாங்கள் பொது எதிரியாக தேசிய மக்கள் சக்தியியை பார்க்கின்றோம். ஆனால் சிங்கள தேசிய கட்சிகள் ஆட்சி செய்தாலும் பரவாயில்லை, இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு பாடம் புகட்ட வேண்டும் என்று நிற்கும் கட்சிகளிடம் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும். - என்றார்.

# இன்றைய ராசி பலன்கள் - 28.04.2025




இன்று உங்கள் விருப்பத்திற்கேற்ப முக்கிய முடிவுகளை உங்களால் எடுக்க இயலும். உங்கள் தன்னம்பிக்கை அதிகமாகக் காணப்படும். நீங்கள் எதையோ சாதித்ததபோல உணர்வீர்கள்.

கடின உழைப்பும் அர்ப்பணிப்பும் உங்களுக்கு வெற்றியை பெற்றுத்தரும். உங்களுள் இருக்கும் திறமைகளை பணியிடத்தில் வெளிபடுத்துவீர்கள்.

உங்களின் நேர்மையான அணுகுமுறை காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். இந்தப் போக்கின் காரணமாக உறவின் பிணைப்பு வலுப்படும். மனம் திறந்து பேசுவதன் மூலம் இருவரிடையே இருக்கும் இடைவெளி குறையும்.

இன்று நிதிநிலை உங்களுக்கு சாதகமாக இருக்கும். ஊக்கத் தொகை வகையில் உங்களுக்கு பணம் கிடைக்கும். உங்கள் சேமிக்கும் ஆற்றல் உயரும்.




இன்று வளர்ச்சி குறைந்து காணப்படும். உங்கள் பணிகளை விரைவாக ஆற்ற இயலாத நிலை காணப்படும். இன்று சோம்பலும் மந்தத் தன்மையும் காணப்படும்.

இன்றுகொடுக்கப்பட்டபணிகளைமுடிக்க இயலாத நிலை காணப்படும். பணிகள் அதிகமாகக் காணப்படுவதே இதற்கு காரணமாக இருக்கும். எனவே பணிகளை திட்டமிட்டு முறையாக கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படாது. புரிந்துணர்வின்மை காரணமாக தேவையற்ற கருத்து வேறுபாடு எழும்.

இன்று அதிர்ஷ்டம் உங்களுக்கு கை கொடுக்காது. இதனால் கூடுதல் பணம்சம்பாதிக்கும் பல வாய்ப்புகளை இழப்பீர்கள். சிறிய அளவில் பண இழப்பும் காணப்படுகின்றது. எனவே எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.




உங்கள் மனதில் இருக்கும் குழப்பம் காரணமாக இன்று சிறிது அமைதியின்மை காணப்படும். இது உங்கள் முடிவெடுக்கும் திறமையை பாதிக்கும்.

உங்கள் பணிகளை ஆற்றும் போது கவனம் தேவை. இல்லாவிடில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. இது சிக்கலுக்கு வழிவகுக்கும்.

உங்கள் துணையுடன் தவறான புரிந்தணர்வு காணப்படும். இதனால் வாக்கு வாதங்கள் ஏற்படும். இத்தகைய சூழ்நிலையை தவிர்ப்பது நல்லது.

இன்று பணஇழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. திட்டமிடலின்மை காரணமாக நீங்கள் சில பிரச்சினைகளைச் சந்திக்க நேரும். இன்று சுறுசுறுப்பாக இருக்க வேண்டியது அவசியம்.

இன்று உங்களால் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிக்க இயலாது. தோள் அல்லது கணுக்கால் வலி காணப்படும்.




இன்று நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் நீங்கள் எதையோ இழந்தது போல உணர்வீர்கள்.

உங்கள் சக பணியாளர்களிடம்–ருந்து சில பிரச்சினைகளை சந்திப்–ீர்கள். காரணமேயில்லாமல் அவர்கள் உங்கள் மீது பழி போடுவார்கள். இது உங்கள் வளர்ச்சியில் தடையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையுடன் தேவையற்ற தவறான புரிந்துணர்வு கொள்வீர்கள். இதனை மாற்றிக் கொள்வது சிறந்தது.

இன்று பணபுழக்கம் குறைந்து காணப்படும் அதிர்ஷ்டமும் குறைந்து காணப்படும். எனவே உங்கள் செலவுகளை முறையாக திட்டமிட்டு செய்யவும்.

அதிக வெப்பம் காரணமாக தோலில் எரிச்சல் ஏற்படும்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். நீங்கள் நல்ல மனநிலையில் காணப்படுவீர்கள். நல்லது நடக்கும் என்ற உணர்வுடன் இருப்பீர்கள்.

உங்கள் பணியில் தொழில் சார்ந்த அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இந்தப் போக்கு உங்களுக்கு அதிர்ஷ்டத்தை அளிக்கும்.

உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்லுறவு காணப்படும்.

இன்று உங்களுக்கு ஊக்கத்தொகை போன்ற வகையில் கூடுதல் பணம் கிடைக்கும். இது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். இதனால் உங்கள் சேமிப்பு உயரும்.

உங்களிடம் காணப்படும் உற்சாகம் காரணமாக நீங்கள் ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




இன்று அமைதியின்மை காரணமாக உங்களிடம் உறுதியும் தைரியமும் குறைந்து காணப்படும். இது உங்கள் வளர்ச்சியை பாதிக்கும். உங்கள் இலக்குகளை அடிய நீங்கள் கவனமாக இருக்க வேண்டியது அவசியம்.

இன்று உங்கள் பணயில் சிக்கல்கள் காணப்படும் என்பதால் கவனமாகப் பணியாற்ற வேண்டும். இது மேலதிகாரிகளின் கவனத்துக்குச் செல்ல வாய்ப்பிருப்பதால் கவனம்.

உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு ஏற்படும். இதனால் இடைவெளி உண்டாகும். எனவே நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று செலவுகள் அதிகமாக காணாப்படும். பணம் இன்று குறைவாக இருப்பதால் நீங்கள் முறையாகத் திட்டமிட இயலாது.




இன்றைய நாள் உங்கள் பொறுமையை சோதிக்கும். எனவே இன்று சகஜமாக இருக்க வேண்டும். அதன் மூலம் இன்றைய நாளை சிறப்பாக ஆக்கலாம்.

பணியிடத்தில் பணிகள் இறுக்கமாக காணப்படும். உங்களிடம் நிறைய எதிர்பார்ப்பார்கள். என்றாலும் சில கட்டுப்பாடுகள் காரணமாக நீங்கள் உங்கள் இலட்சியத்தை அடைய இயலாது.

உங்கள் துணை உங்கள் அன்பை சரியாக புரிந்து கொள்ள மாட்டார். நீங்கள் உங்கள் அன்பில் நேர்மையாக இருந்தாலும் அதனை உங்கள் துணை சரியாக புரிந்து கொள்ள மாட்டார்.

இன்று உங்களால் செலவுகளை கட்டுபடுத்த இயலாது. எனவே சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.




இன்றைய நாள் கடினமாக இருக்கும். உங்களிடம் பதட்டம் காணப்படும். பிரார்தனை மற்றும் வழிபாடு சிறந்த பயனளிக்கும்.

பணிகள் அதிகமாகவும் நேரம் குறைவாகவும் காணப்படும். இதனால் உங்களுக்கு பதற்றம் உண்டாகும். பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது.

உங்கள் துணையுடன் தேவையற்ற சண்டைகள் ஏற்படும். கருத்து வேறுபாடு ஏற்படாமல் தடுக்க அவருடன் அனுசரித்து செல்வது சிறந்தது.

அதிக பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற உங்கள் லட்சியம் அவ்வளவு எளிதானதல்ல. பணம் வந்தாலும் தேவையற்ற செலவுகள் காரணமாக நீங்கள் பணத்தை பராமரிக்க இயலாது.

# இன்றைய ராசி பலன்கள் - 28.04.2025




நீங்கள் இன்று விரைந்து பணியாற்றுவீர்கள். கடினமான பணிகளையும் மேற்கொள்வீர்கள். உங்கள் இலக்குகளை அடைந்து திருப்தியடைவீர்கள்.

பணியிடச் சூழல் சுமூகமாக இருக்கும். சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கப் பெறுவீர்கள். இதன் மூலம் பணியில் சாதிப்பீர்கள்.

இன்று பக்குவமும் புரிந்துணர்வும் கொண்டதன் காரணமாக உங்கள் துணையுடன் நல்லுறவு கொண்டிருப்பீர்கள். இதனால் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

உங்களின் முயற்சி காரணமாக இன்று அதிக பணம் சம்பாதிப்பீர்கள். கணிசமான தொகை சேமிப்பீர்கள்.

பக்தியும் பிரார்த்தனையும் உங்களை மகிழ்ச்சியான மனநிலையில் வைத்திருக்கும்.




இன்று சில பிரச்சினைகளை சந்திக்க நேரும் என்பதால் பொறுமையும் மன உறுதியும் அவசியம். சிக்கலான சூழ்நிலையை சமாளிக்க நேர்மறையான எண்ணங்கள் அவசியம்.

உங்கள் சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளிடம் நல்லுறவு பராமரிக்க முடியாது. மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. இதனால் சிறிது குழப்பம் ஏற்படும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது. இதனால் நல்ல மன நிலையும் புரிந்துணர்வும் காணப்படும்.

இன்றி நிதிநிலை சாதகமாக இருக்காது. இன்று அதிகரிக்கும் செலவுகள் காரணமாக நீங்கள் கடன் வாங்க நேரலாம்.




நீங்கள் எந்த செயலை செய்தாலும் அதனை பொறுப்புடன் செய்வீர்கள். இதனால் வளர்ச்சியும் வெற்றியும் எளிதாகப் பெறுவீர்கள். இன்று முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

உங்கள் பணிகளை சாமர்த்தியமாக செய்வீர்கள்.தொழில் சார்ந்த அணுகுமுறை மேற்கொள்வீர்கள். பணிகளை எளிதாக முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை மேற்கொண்டு நல்லுறவை ஏற்படுத்துவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்றைய நாளை அதிக முயற்சி எடுக்க பயன்படுத்திக் கொள்ளுங்கள். இன்று ஊக்கத்தொகை கிடைக்க வாய்ப்புள்ளது.

இன்று அதிக ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




இன்று சிக்கல் நிறைந்த நாளாக காணப்படும். வளர்ச்சி குறைந்து காணப்படும். இதனால் இன்று ஏமாற்றங்களும் நிறைந்து காணப்படும்.

உங்கள் சக பணியாளர்களிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். உங்கள் வளர்ச்சி குறித்து அவர்கள் சிறிது பொறாமைப் படுவார்கள்.

உங்கள் துணையுடன் சமூகமான உறவு காணப்படாது. நல்லுறவை பராமரிக்க சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. பணத்தை கவனமாகக் கையாள வேண்டும். சேமிப்பு குறைந்து காணப்படும். இன்று நிதி குறித்த எந்த முடிவையும் எடுக்க வேண்டாம்.

# வவுனியா தம்பனை புளியங்குளம் குளத்தில் மீட்கப்பட்ட சடலத்தை அடையாளம் காண உதவுமாறு கோரிக்கை




(கி.வசந்தன்)

வவுனியா, நெளுக்குளம் – நேரியகுளம் வீதியில் உள்ள தம்பனை புளியங்குளம் குளத்தில் மீட்கப்பட்ட சடலத்தை அடையாளம் காண உதவுமாறு நேற்று நெளுக்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.எம்.ஏ.சமரக்கோன் தெரிவித்துள்ளார்.

வவுனியா- இராசேந்திரகுளம் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட நெளுக்குளம் – நேரியகுளம் வீதியில் உள்ள தம்பனை புளியங்குளம் பகுதியில் இருந்து கடந்த முதலாம் திகதி சடலம் ஒன்று மீட்கப்பட்டிருந்தது. குறித்த சடலம் 40 வயதிற்கு மேற்பட்டவர் என அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், மரணமடைந்து 10 – 15 நாள்களுக்குப் பின்னரே இந்தச் சடலம் மீட்கப்பட்டிருந்தது.

நீல கலர் கோடு போட்ட சேட்டு அவரது சடலத்தில் அருகில் கண்டு பிடிக்கப்பட்டது. உருக்குலைந்த நிலையில் காணப்பட்டதால் சடலத்தை பற்றிய மேலதிக அடையாளங்களை பெற முடியவில்லை. வவுனியா வைத்தியசாலையில் உள்ள பிரேத அறை குளிரூட்டி இயங்காமையால் முல்லைத்தீவு வைத்தியசாலையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது. இதனை அடையாளம் காண உதவுமாறு கோருவதுடன், அவ்வாறு இல்லாவிடின் அரச செலவில் குறித்த சடலத்தை நல்லடக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த வயதை கிட்டிய நபர்கள் எங்காவது காணாமல் போயிருந்தால் நெளுக்குளம் பொலிஸ் நிலையத்தின் 0718592778 அல்லது 0242054286 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் மேலும் தெரிவித்தார்.